தமிழ் முரசு

ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்



1951
ப்ரவரி-மார்ச்
லை 4 அணா

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி 6 :: சென்னை 1951 பிப்ரவரி—மார்ச் :: பகுதி 10-11

பொருளடக்கம்

●

கேரளத்தில் 'மனித நரிகள்!'	....	தலையங்கம்	2
நாட்டு நடப்பு	....		6
அட்டைப்பட விளக்கம்	....		9
சிலப்பதிகார காப்பிய அமைப்பு	....	"வண்டு"	11
விஞ்ஞானமே, எங்கு போவாயோ?	....	'கமலம்'	17
கண்ணீரிலே கலந்த கவிதை	....	ம. பொ. சி.	19
"தமிழ்க் கலைக்கு இழிவு"	....	டி. கே. எஸ்.	23
தமிழன் கூக்குரல்	....	ப. ரா. கிருஷ்ணசாமி	27
தமிழரசா? திராவிடஸ்தானா?	....	ம. பொ. சி.	30
காங்கிரஸ் தேவையா?	....	ஞானம்	32
துயிலை நீக்கு!	....	ஒட்டக்கூத்தன்	40

வெளி வந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

ம. பொ. சி. எழுதிய

திராவிடக் கழகமே, வேங்கடத்திற்கு வெளியே போ!	0	2	0
திராவிடத்தார்களின் திருவிளையாடல்கள்	0	1	0
தளபதி சிதம்பரனார்	0	2	0
வீரபாண்டிய கட்டபொம்மன் (3-ம் பதிப்பு)	1	12	0

இன்ப நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை 4.

தமிழ் முரசு

திருவள்ளுவராண்டு 1982 மாசி - பங்குனி

கேரளத்தில் ‘மனித நரிகள்!’

“தமிழ்க் கலைக்கு இழிவு” என்ற தலைப்பில், ‘ஔவை’ டி. கே. சண்முகம் எழுதியுள்ள கட்டுரையை பிறிதோர் பக்கத்தில் காணலாம். மலையாள வெறியர்களால் ஆலப்புழையில் தமிழ் நாடகக் கலைக்கு நேர்ந்த அவமதிப்பை வேதனையோடு விளக்கியிருக்கிறார் நண்பர் சண்முகம்.

திருவிதாங்கூர், முழுக்க முழுக்க மலையாள நாடல்ல. தென் திருவிதாங்கூர் முழுவதும் தமிழரே வாழ்கின்றனர். வட திருவிதாங்கூரிலும், குறிப்பாக ஆலப்புழை, திருவனந்தபுரம் போன்ற பகுதிகளில் தமிழர் சற்றேறக் குறைய சமஎண்ணிக்கையுடன் வாழ்கின்றனர். ஆகவே, திருவிதாங்கூர் நாடு, மலையாளிகளுக்கே சொந்தமென்று வேலிகட்டி வாழ்வது முடியாத காரியம். மேலும், டி. கே. எஸ். சகோதரர்கள், திருவிதாங்கூர் ராஜ்யத்தின் பூர்வ குடிகளாவர். ஆகவே, அவர்களை ‘எங்கள் நாட்டுக் கலைஞர்கள்’ என்று இறுமாப்புடன போற்றியிருக்க வேண்டியது மலையாளிகளின் கடமை. இந்த நல்லபுத்தி அவர்களுக்கே தோன்றாவிடினும், தமிழர்களைப் பார்த்தேனும் கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

தியாகய்யர் தெலுங்கு பேசும் குடும்பத்தைச் சேர்ந்தவர்; தெலுங்கிலேயே கீர்த்தனங்கள் எழுதியவர். என்றாலும், தமிழ்நாட்டுக் குடிமகன் என்ற காரணத்தால், அவரைத் தமிழராகவே கருதி அவரியற்றிய தெலுங்குக் கீர்த்தனங்களுக்குக்கூட தமிழ்நாட்டார் மதிப்பு கொடுத்து வருகின்றனர்.

அப்படியே வீரபாண்டியக் கட்டபொம்மன், பூர்வம் ஆந்திர நாட்டைச் சேர்ந்தவர்களின் வழித்தோன்றலாவான். என்றாலும், தமிழ்நாட்டின் நிரந்தரக் குடியாகிவிட்ட காரணத்தால், அவனைத் தமிழ் மகனாகவே கருதி அவன் செய்த தியாகத்தைப் போற்றி வருகின்றனர் தமிழ மக்கள். தமிழ் வரலாற்றில் இப்படி எத்தனையோ சான்றுகள் உண்டு. ஆனால், ஆலப்புழையில் நரிகளைப் போன்று ஊளையிட்ட மலையாளிகளின் மூளையில்

இந்தச் செந்நெறிகளைப் புகுத்த முடியாதுதான். கேரள நாட்டின் பிரதமராயிருக்கும் டி. கே. நாராயணப் பிள்ளையவர்களே திருவிதாங்கூர் தமிழர்களுக்கு எதிராக வெறிபிடித்து வேலை செய்யும்போது, அவரது ஆட்சிக்குட்பட்ட 'கேரளங்கள்' மட்டும் நாணயமாக நடந்துகொள்ளுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

ஆலப்புழை தியேட்டரில் வந்திருந்த 'கேரளங்களுக்கு' ஔவை நாடகம் பிடிக்கவில்லையென்றால், மரியாதையாக தியேட்டரைவிட்டு வெளியே போயிருக்கலாம். போக மனமில்லாவிட்டாலும், மனிதத்தன்மையோடு வெறுப்பை வெளிப்படுத்தியிருக்கலாம். அப்படிக்கின்றி, நரிகளைப்போன்று ஊளையிட்டிருக்கின்றனர். ஒருவேளை, அதுதான் மலையாள நாகரீகம் போலும்!

ஆலப்புழை சம்பவம், அன்பர் சண்முகம் கூறுவதுபோன்று, ஏதோ ஒரு தனிப்பட்ட ஆளுக்கோ, அல்லது கம்பெனிக்கோ நேர்ந்த அவமதிப்பன்று. தமிழ்க் கலைக்கு நேர்ந்த அவமதிப்பாகும். தமிழர்களை மலையாளிகள் எந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர் என்பதற்கு ஆலப்புழை சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாகும். மலையாளிகளிடம் கண்ட இதே மனப்பான்மையைத்தான் ஆந்திரர்களிடமும் நாம் பன்முறை கண்டிருக்கிறோம்.

குமரிமுதல் இமயம்வரை ஒரே பிரஜா உரிமை வழங்கியிருக்கிறது குடியரசுச் சட்டம். ஆம்; யாரும், எங்கும் குடியேறி வாணிபம் செய்யவும், தொழில் புரியவும் உரிமையளிக்கிறது. இந்த உரிமையைத் தமிழர் பயன்படுத்திக்கொள்ள முடியாதவாறு கேரள நரிக்கூட்டம் ஊளையிட்டுத் தடுக்கிறது. மொழிவழியாட்சி வேண்டுமென்பதைக் 'குறுகிய நோக்கம்' எனக் குறைகூறும் தமிழ்நாட்டு தேசியத் தோழர்கள் ஆலப்புழை சம்பவத்தை அறிந்த பிறகேனும் திருந்துவார்களாக!

கேரளரும் தமிழரும் ஒரே திராவிட இனத்தவர் எனக் கூறித்திரியும் திராவிடத்தார்களுக்கு, ஆலப்புழை சம்பவம் ஒரு பலமான அடியாகும். அன்பர் சண்முகம் திராவிடத்தார்களுக்கு எதிரியல்லர். ஆகவே அவர், 'எனது அருமைத் திராவிடத்தோழர்கள் சிந்திக்க வேண்டும்' என்று கேட்டிருப்பது திராவிடத்தார்களின் சிந்தனைக்கு வேலை தருவதாகும்.

டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற, தமிழர் மிகமிகச் சிறுபான்மையினராக வாழும் பிரதேசங்களில், தமிழ் விழாக்களும் நாடகங்களும் அடிக்கடி நடத்தப்படுகின்றன. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் போன்ற கலைஞர்கள் அங்கு சென்று வந்திருக்கின்றனர். அங்கெல்லாம் இப்படி யாரும் ஊளையிட்டதாக செய்தி கிடையாது. அதுமட்டுமல்ல, அங்குள்ள தமிழரல்லாத அமைச்சர்களும், அறிஞர்களும், கலைஞர்களும் தமிழ் விழாக்களில் பங்கு கொண்டதாகவும் செய்திகளைப் படிக்கின்றோம். ஆனால், 'பகுத்

தறிவு' இயக்கத்தார் உறவுகொள்ள விரும்பும் கேரளத் திராவிடங்கள், தமிழ்க்கலைக்கு எதிராக ஊளையிடுகின்றன. இதையறிந்த பின்னரேனும் தங்கள் கற்பனையில் காட்சியளிக்கும் 'திராவிடம்' கானல்நீர் என்பதை உணர்ந்து கொள்வார்களா?

அன்பர் சண்முகத்திற்கு ஒரு வேண்டுகோள்: கலைத்துறையில் ஈடுபட்டுள்ள தமிழரிடையே இனஉணர்ச்சி தோன்றுமானால் கலைத்துறையிலேயே - பதிலுக்குப்பதில் கொடுக்கும் தன்மான உணர்ச்சி வளருமானால், தமிழ்க்கலையை அவமதிக்கும் துணிச்சல் பிறமொழியினருக்கு ஏற்படமுடியாது. ஆகையால், கலைத்துறையில் ஈடுபட்டுள்ள தமிழரிடையே மொழிவழி இன உணர்ச்சியை உருவாக்கவும் அதற்கு மாறுபட்ட திராவிட மாயையை விலக்கவும் பாடுபடுவாராக!

உதைத்த காலுக்கு முத்தம்!

தி. க.வின் தினத்தாளான 'விடுதலை', டி. கே. சண்முகத்தின் அறிக்கையைப் பிரசுரிக்காமலே, அதைப்பற்றி தனது அபிப்பிராயத்தை எழுதியிருக்கிறது. அதில், 'மலையாளிகள் செய்தது தவறு' என்று வெண்டைக்காய் பாஷையில் கூறிவிட்டு, "மொழிவெறியர்கள் இங்கும் இருக்கிறார்கள்; பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகளாக இருக்கவேண்டுமென்பதற்காகவே அவர்கள் மொழிவெறியைக் கிளப்புகிறார்கள்" என்று தனது 'திராவிட பாஷை'யிலே தமிழரசுக் கழகத்தாரை கண்டித்திருக்கிறது. அதுமட்டுமல்ல; ஆலப்புழையில் ஊளையிட்ட கேரள நரிகளோடு தமிழர் உறவு கொள்ள வேண்டும் என்றும் உபதேசம் செய்திருக்கிறது. உதைத்த காலுக்கு முத்தமிடுவதையே தங்கள் கொள்கையாகக் கொண்டுவிட்ட கூட்டத்தார், ஊளையிடும் மனித நரிகளோடு உறவு கொள்வதில் இன்பங் காணலாம். ஆனால், பிறர்மானத்துக்கு இடங்கொடுத்து தன்மானத்தைக் காக்க விரும்பும் தமிழனுக்கு அது இயலாதகாரியம்.

தமிழகத்தைத் தனிநாடாக்கி, தமிழை அரசுமொழியாக்கி' தனியரசு செலுத்த வேண்டுமென்கின்றனர் தமிழரசுக் கழகத்தினர். இதற்காக அவர்களை மொழி வெறியர்களென்று சாக்கிட்டுப் பேசுகிறது 'விடுதலை',

தமிழரசுக் கழகத்தாருக்கு மொழி வெறி இருந்திருந்தால் ஆடவர் நடத்தும் ஆந்திர மகா சபையும், மங்கையர் நடத்தும் ஆந்திர மகா சங்கமும் கேரள சமாஜமும் தமிழகத்தின் தலைநகரான சென்னையில் இருக்கமுடியாது. கிருஸ்துமஸ் தோறும் ஆந்திரர்கள் கலை விழாக்களும் கண்காட்சிகளும் நடத்துகிறார்களே, கேரளர்கள் மாநாடு நடத்துகிறார்களே, அவையெல்லாம் அமைதியாக நடைபெற முடியாது. ஆனால், தமிழரசுக் கழகத்தார் தேசிய உள்ளம் படைத்தவர்கள். அவர்கள் மனித நெறிப்படி நடப்பவர்களேயன்றி, மிருக வெறியைக் கடைபிடிக்கமாட்டார்கள்.

சாதி வெறியர்கள், ''பாம்பையும் பார்ப்பானையும் கண்டால், முதலில் பார்ப்பானைக் கொல்லு'' என்று இளம் பிள்ளைகளை ஏவி விட்டு சுவறுகளில் எழுதச் செய்கிறார்களல்லவா? அதைப் போல, ''அரவத்தையும் ஆந்திரரையும் கண்டால், முதலில் ஆந்திரரைக் கொல்லு'' என்று தமிழரசுக் கழகத்தார் எந்தச் சுவற்றிலும் எழுதியதில்லை.

மாகாண வெறியர்கள், வடவர் கடை முன்பு மறியல் செய்கிறார்களல்லவா? அதுபோன்று, தமிழருக்கே உரிய சென்னை நகரில், ஆந்திரர் கடை வைத்திருப்பதை ஆட்சேபித்து, தமிழரசுக் கழகத்தார் மறியல் செய்ததில்லை.

சென்னை வந்துபோகும் வட நாட்டுத் தலைவர்களுக்கு ஒரு கூட்டத்தார், கருப்புக் கொடி காட்டுகிறார்களல்லவா? அது போன்று நாஞ்சில் தமிழர்களின் உரிமையை மறுக்கும் திருவிதாங்கூர் இராஜப் பிரமுகரும் முதலமைச்சர் டி. கே. நாராயணப் பிள்ளையும் சென்னை நகர் வந்தபோது தமிழரசுக் கழகத்தார் கருப்புக்கொடி காட்டியதில்லை. இந்த வெறிபிடித்த செயல்கள் திராவிடத்தார்களுக்கே உரிய வேலைத்திட்டம்!

பிறவிக் கூனன், தன் கூனறியாமல், பிறருக்கு கூனிருக்கிறது என்று கூறினால், ''பிறவிக் கூனனே! உன் கூனை முதலில் நிமிர்த்திக் கொள்'' என்று திருப்பிக் கூறுவது குற்றமல்ல. அதுபோலவே, 'விடுதலை'யார் தனக்கும் தன் கூட்டத்தாருக்கும் பிடித்திருக்கும் சாதி வெறி, 'இன' வெறியைப் போக்கிக்கொள்ளட்டும். நமக்கு புத்திவரத் தேவையில்லை. ''நாஞ்சில் நாட்டைத் தமிழ் நாட்டோடு சேர்க்கவேண்டுமென்று அங்குள்ள தமிழர் கிளர்ச்சி செய்வதன் எதிரொலிதான் ஆலப்புழை சம்பவம்'' என்றாராம் தி. மு. க. 'அறிஞர்' ஒருவர்.

சென்னையை ஆந்திரர்கள் கேட்கிறார்கள் என்பதற்காக, சென்னைவரும் ஆந்திரத் தலைவர்களை, அறிஞர்களை, கலைஞர்களை தமிழ் மக்கள் அவமதிக்கின்றார்களா? இல்லையே.

வட நாட்டிலிருந்து திராவிட நாடு பிரியவேண்டுமென்ற கோரிக்கைக்காக, வடவர் கடை முன்பு திராவிடத்தார்கள் மறியல் செய்கிறார்களே, அதற்காக ஆத்திரங்கொண்டு வட நாடு செல்லும் தமிழ்த் தலைவர்களை, அறிஞர்களை, கலைஞர்களை அங்குள்ள மக்கள் அவமதிக்கிறார்களா? இல்லை.

ஆந்திரர் சென்னையைக் கேட்பது அறிவுக்குப் புறம்பான கோரிக்கை; திராவிடத்தார்கள் வடவர் கடையை மறியல் செய்வது அரசியல் சட்டத்திற்குப் பொருந்தாத ஆர்ப்பாட்டம். அப்படியிருந்தும், தமிழரோ வடவரோ இவற்றிற்காக ஆத்திரப்பட்டு எதிர் நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

தென் திருவிதாங்கூர், தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை உள்நாட்டு அமைச்சராக இருந்த பட்டேல் ஒப்புக்கொண்டது. பட்டாபியின் ஆதரவைப் பெற்றது; திருவிதாங்கூர் பிரதமராக இருந்த பட்டம் தாணுப்பிள்ளை போன்ற கேர

நாட்டு நடப்பு



"மனவாடு" மாரீசராகிறார்!

ஆந்திர கேசரி பிரகாசம்காரு இழந்துவிட்ட மாகாணப் பிரதமர் பதவியை மீண்டும் பிடிப்பதற்கு எத்தனையோ 'புரட்சிகளை' நடத்திப் பார்த்தார். இருமுறை கட்சித் தலைவர் தேர்தலில் நின்றார்; மண்ணைக் கவ்வினார். பிறகு டாக்டர் சுப்பராயனை நிறுத்தி வைத்து தான் சூத்திரதாரியாக இருந்து ஆட்டி வைத்தார். கிடைத்த பலன் தோல்விதான். அமைச்சர்கள் மீது லஞ்சக் குற்றம் சாட்டி ஆர்ப்பாட்டம் செய்தார். அதுவும் புஸ்வாணமாகப் புகைந்து போயிற்று. அசெம்பிளிக்குள்ளேயே காங்கிரஸ் கட்சிக்கு எதிர்முகாம் அமைக்க முயன்றார் - ஆள் கிடைக்காத காரணத்தால் முயற்சி முற்றுப் பெறவில்லை. இப்போது இன்னொரு புது முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். அதாவது பேராசிரியர் கிருபளானி துவக்கியுள்ள "காங்கிரஸ் ஜனநாயக முன்னணி"க்கு ஆந்திர நாட்டில் கிளை அமைத்து அதற்குத் தம்மையே தலைவராக்கிக் கொண்டிருக்கிறார். ஜனநாயக முன்னணிக் கட்சி 'மனவாடு'களின் முகாமுக்குப் பிரகாசம் தலைவராவதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், புதுக்கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டு பிரகாசம் காரு தமிழ் நாட்டில் பவனி வரத் தொடங்கி யிருப்பதால் விளையவிருக்கும் விபரீதங்களைக் குறித்து தமிழ் மக்களுக்கு எச்சரிக்கை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அண்மையில் கரூர், திருச்சி போன்ற தமிழ்ப் பகுதிகளில் பிரகாசம் சென்று பிரசாரம் செய்திருக்கிறார். தமிழ் நாட்டில் பிறமொழியினர் உலவி வருவதையோ, தமிழ் மக்களோடு அரசியல் ரீதியாக உறவு கொள்வதையோ நாம் எதிர்க்கவில்லை. ஆனால், 'மதராஸ் மனதே' எனக் கூறும் ஆந்திர இன வெறியரான பிரகாசம் தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெறத் தகுதியற்றவர். அரசியல் ரீதியாகத் தமிழர்களிடையே அடையும்செல்வாக்கை தமிழினத்தைப் பிளவுபடுத்தவும் தலைநகரைப் பறிக்கவும் பின்னர் பயன்படுத்தலாம். அப்படிப் பயன் படுத்தியதும் உண்டு.

ளத்தலைவர்கள் பலரின் அங்கீகாரத்தைப் பெற்றது. ஆகவே, திருவிதாங்கூர் தமிழர்களின் நேர்மையான கோரிக்கைக்காக, ஆலப்புழை மலையாளிகள் ஆத்திரப்பட நியாயமில்லை. மேலும், கலைஞர்களை அவமதிப்பதென்பது அறிவற்ற செய்கை. எனவே, தி. மு. க. 'அறிஞரின்' சமாதானம், ஆலப்புழை சம்பவத்தால் வேதனைப்படும் திரு. சண்முகத்திற்கு ஆறுதல் தருவதல்ல.

ஆனால், ஆயிரம் ஆலப்புழைகள் நடைபெற்றாலுங்கூட திராவிடத்தார்களின் போக்குத் திருந்தப் போவதில்லை. எனவே, திராவிட மாயையில் சிக்கியுள்ள ஒரு சில தமிழ் இளைஞர்களேனும், ஆலப்புழை சம்பவம் கண்டு, தமிழ் இன உணர்ச்சி கொண்டு தமிழரசு இயக்கத்தில் ஈடுபடுவார்களாக.

ஆகவே, "மதருஸ் மளதே" என்னும் பிரகாசம் தமிழ்நாட்டின் அரசியலில் தலையிட தமிழ் மக்கள் அனுமதிக்கக்கூடாது. தமிழ்நாட்டு அரசியல் ஊழியர்கள் மான்வேடம் பூண்ட இந்த மாரீசரிடம் எச்சரிக்கையாக இருப்பார்களாக!

நெசவாளர் அல்லல்

சென்னை மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நூல் பஞ்சம் நெசவாளர்களை மரணக் குழிக்கு அருகே கொண்டு வந்திருக்கிறது. சேலம், வட ஆற்காடு போன்ற ஜில்லாக்களில் நெசவாளர் படும் அல்லல்களை நினைத்தாலே நம் நெஞ்சு கொதிக்கிறது. சென்னை மாகாணத்திற்குள் மொத்தம் 4½ லட்சம் தறிகள் இருக்கின்றன. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 3 லட்சம் தறிகள் இருக்கின்றன. ஆகவே, நூல்பஞ்சத்தால் பெரும்பாலும் தமிழ்க் குடும்பங்களே பட்டினிக்குப் பலியாகி வருகின்றன. அமைச்சர்கள் அறிக்கையின் மூலம் அனுதாபம் காட்டுகிறார்களே ஒழிய, அல்லல்படும் மக்கள் மத்தியிலே போய் ஆறுதல் கூறவில்லை.

நெசவாளர்களின் வாழ்க்கை மிகப் பயங்கரமான வகையில் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையிலும், சம்பந்தப்பட்ட இலாகாவை நிர்வகிக்கும் அமைச்சர் திரு. பெருமாள்சாமி ரெட்டியார் நெசவாளர் பிரதேசங்களுக்கு நேரில் சென்று அவர்களோடு தொடர்பு கொள்ளவில்லை. ஸ்தல காங்கிரஸ்காரர்களுக்கு பெருந் தலைவர்கள் வழி காட்டாததால் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இந்த நிலையில், காங்கிரஸ் எதிரிகள் நெசவாளர்கள் கிளர்ச்சிக்கு தலைமை தாங்குவது தவிர்க்க முடியாததாகிறது. இனியேனும், ஸ்தல காங்கிரஸ்காரர்கள் இம்மாதிரி கிளர்ச்சிகளை நடத்தும் பொறுப்பைத் தாங்களே மேற்கொள்ள முன் வர வேண்டும். பாசாங்கு செய்வதற்கு அல்ல; உண்மையாகவே மக்கள் குறையைப் போக்குவதற்கு பாடுபடுவதற்கு முன் வரவேண்டும். மக்களுக்காக காங்கிரசேயொழிய, மந்திரிகளுக்காக காங்கிரசல்ல. அண்மையில், அமைச்சர் மஹாதாப் சென்னை வந்ததன் விளைவாக, நிலைமையில் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும், இன்னும் நெசவாளர்களுக்குத் தேவையான நூல் உடனடியாகக் கிடைக்குமென்ற உத்தரவாதம் ஏற்படவில்லை. பட்டினியால் வாடும் நெசவாளர்களின் நூல் தேவையைப் பூர்த்தி செய்வதைவிட, பணக் கொள்ளையடிக்க வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதையே முக்கியமாகக் கருதுகின்றனர் தென்னாட்டு மில்முதலாளிகள். இவர்களுடைய பேராசைக்கு முடிவுகட்டும் திட்டந்தான் நெசவாளர்களின் நூல் பஞ்சத்தைப் போக்கும் திட்டமாக இருக்க முடியும். சென்னை அரசாங்கம் அத்தகைய திட்டத்தைத் தயாரிக்குமா?

திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு

திராவிட இயக்கம், தமிழகத்துக்குப் புதியதல்ல. சுமார்

முப்பதாண்டுகளாக, இருந்து வருவதுதான். சுயமரியாதைக் கட்சி - ஜஸ்டிஸ் கட்சி - தமிழர் கட்சி - திராவிடக் கட்சி என்று பல வேடங்களைத் தாங்கினாலும், பேர்வழிகள் பழையவர்கள் தான்.

திராவிடத்தார்களின் தற்காலப் போக்கு தமிழரது பண்பாட்டிற்கும், பழம் பெருமைக்கும் அழிவு தேடுவதாயிருக்கிறது. கல்வியறிவு, ஒழுக்கம் இவையற்ற இளைஞர்களைத் தூண்டிவிட்டு, சுவர்களில் ஆபாச வாசகங்களை எழுதுகின்றனர். தங்களுக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் கேவலமாகத் திட்டிப் பேசுகின்றனர் - எழுதுகின்றனர். காம வெறியூட்டும் கதைகளையும் கட்டுரைகளையும் எழுதி மாணவர்களிடையே பரப்பி அவர்களது மனத் தூய்மையைக் கெடுக்கின்றனர். ஆகவே, முன் எப்போதுமில்லாத அளவிற்கு திராவிடத்தார்கள் மீது ஒரு வெறுப்புணர்ச்சி நாட்டில் வளர்ந்து வருகிறது ஏன்? திராவிடத்தார்களின் தவறான போக்கிற்கு எதிராக ஒரு இயக்கமே உருவாகி வருகிறது எனலாம்.

இந்த இயக்கத்தின் முதல் மாநாடு, அடுத்த மார்ச் மாதத்தில் சென்னையில் நடைபெற இருக்கிறது. திரு. சின்ன அண்ணாமலையை வரவேற்புத் தலைவராகவும், திரு. கே. எஸ். ஏகாம்பரத்தை செயலாளராகவும், திரு. ஏ. எம். சம்பந்தத்தை பொருளாளராகவும் கொண்ட வரவேற்புக் குழு, மாநாட்டிற்கான வேலைகளை சிறப்புடன் செய்துவருகிறது.

மாநாடு, வெறும் திராவிட இயக்க எதிர்ப்புக்காக மட்டுமல்லாமல், தமிழகத்தைத் தனி மாகாணமாக்குவது, தமிழை அரசு மொழியாக்குவது போன்ற ஆக்க வழி வேலைகளிலும் கவனம் செலுத்துமென்றும், வரவேற்புக் குழுவினர் அறிவித்துள்ளனர். அத்துடன், மாநாடு நடக்கும் பந்தலில் அதற்கு முதல் நாளன்று, "சிலப்பதிகார மாநாடு" ஒன்று நடத்தவும் தமிழரசுக் கழகத் தோழர்கள் உள்பட பலர் திட்டமிட்டிருக்கின்றனர், என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த மாநாட்டிற்கு திரு. ம. பொ. சி.யின் ஆதரவு இருப்பது இயற்கை. ஆனால், இந்த மாநாட்டைக் கூட்டுவதே திரு. ம. பொ. சி.தான் என்று சிலர் நம்புவதாகத் தெரிகிறது. 'கல்கி' கூட திரு. ம. பொ. சி.யைப் பாராட்டி எழுதியுள்ள ஒரு குறிப்பில், இப்படி எழுதியிருக்கிறது. இது சரியல்ல. மாநாடு, திராவிடத்தார்களின் தவறான போக்கை எதிர்க்கவேண்டுமென்று, தேசிய ஊழியர்களிடையே எழுந்த ஏகோபித்த எண்ணத்தின் எதிரொலியாகும். ஆரம்ப முதலே, பல பயமுறுத்தல்களுக்கிடையேயும் மாநாட்டுக்கான பொறுப்பு அவ்வளவையும் ஏற்று பாடுபட்டு வரும் பெருமை திரு. சின்ன அண்ணாமலையையே சேர்ந்ததாகும்.

மாநாடு வெற்றி பெறுவதற்கு தமிழ் மக்கள் முழு ஆதரவு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

அட்டைப்பட விளக்கம்:

ராஜாஜி

இந்தத் திங்கள் "முரசு" இதழில், அட்டைப் பக்கத்தில் காட்சியளிப்பது சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் என்பதை நாம் சொல்லாமலே அன்பர்கள் அறிந்துகொள்வர். ராஜாஜி, தம் வாழ்நாளில் தேச பக்தி காரணமாக இன்னல்கள் பல அடைந்தவர். காங்கிரஸ் அதிகாரத்திற்கு வந்த பிறகு அப்பெரியார், சென்னை மாகாணப் பிரதமர் - இந்திய இடைக்கால ஆட்சியின் தொழில் அமைச்சர் - வங்காள கவர்னர் - இந்தியாவின் கவர்னர் ஜெனரல் என்ற பல பெரும் பதவிகளை வகித்து தமக்கும், தம்மைப் பெற்றெடுத்த தமிழகத்திற்கும் பெருமை தேடியவர். முதுமை காரணமாக, அரசியலிலிருந்து விலகியிருக்க வேண்டிய பருவத்திலும் இந்திய அரசின் உள்நாட்டு அமைச்சர் பதவியை ஏற்றுப் பணியாற்றி வருகிறார்.

சர்தார் படேலுக்குப் பிறகு அந்தப் பதவிக்கு அவர்தான் தகுதி வாய்ந்தவர் என்பதை அவரது பகைவர்கள்கூட ஏற்றுக் கொள்வர் என்பதில் ஐயமில்லை.

ராஜாஜி, உள்நாட்டமைச்சர் பொறுப்பேற்ற பின்பு, தடுப்புக் காவல் சட்டத்திருத்த மசோதாவை முதன் முதலாகப் பாராளுமன்றத்தில் பிரேரேபித்திருக்கிறார். மசோதாவைத் தயாரித்தவர், ராஜாஜியல்லர்; சர்தார் பட்டேல். அவர் மறைந்துவிடவே, அவரது பதவிக்குவந்த ராஜாஜி அதைப் பிரேரேபித்தது இயற்கை.

காவல் சட்டம், கம்யூனிஸ்டுகள் மீதுதான் பிரயோகிக்கப்படுமென்பது அனுபவம் காட்டும் உண்மை- கம்யூனிஸ்டுகளின் கடந்த காலப் போக்கைக் கவனத்தில் கொள்ளும் எவரும் இந்தக் காவல் சட்டத்தை வெறுப்பதற்கில்லை. கல்கத்தா, சென்னை போன்ற மாகாணங்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் மீதிருந்த தடை நீக்கப்பட்டிருந்தும் அவர்கள் தங்கள் மனமாற்றத்தை இதுவரை வெளிப்படுத்தினார்களில்லை.

பலாத்காரச் செயல்களில் ஈடுபடும் முன்பு, காங்கிரஸ்காரர்களிலேயே முற்போக்குக் குணம் படைத்த பலர், கம்யூனிஸ்டுகளை வெளிப்படையாக ஆதரித்ததுண்டு. அவர்களோடு கூட்டணி வகுத்து மக்களின் குறைகளை நீக்கப்பாடுபட்டதுமுண்டு. ஆனால், காரணமின்றி, திடீரென்று கம்யூனிஸ்டுகள் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டனர். இதனால், கம்யூனிஸ்டுகளல்லாத முற்போக்காளர்களின் ஆதரவை இழந்தனர். கடந்த 'காலநிலைமை எதுவாயினும், இனியேனும் கம்யூனிஸ்டுகள் சட்டரீதியான நிலைக்கு மீண்டும் வரவேண்டும். உணவுப் பஞ்சம், நூல் பஞ்சம் போன்ற குறைகளைப் பயன் படுத்திக் கொண்டு, வகுப்புவாதப் பிற்போக்குக் கும்பல்கள், மக்களை ஏய்த்து கரண்டல்காரர்களின் முகாமுக்கு இட்டுச் செல்கின்றனர். இந்தக் கும்பல்கள் வெற்றி பெறுமேல், இனி நெடுங்காலத்திற்கு இடது சாரி அரசியல் கட்சிகள் வளர்ச்சி பெற முடியாது. உள்நாட்டு விஷயங்களில் நேரு ஆட்சியிடம், இடதுசாரிகளுக்குக் கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால், சர்வதேச அரசியல் விஷயத்தில் நேருவின் ஆட்சி, இடது

சாரி கட்சிகளின் எண்ணத்தையே எதிரொலி செய்கிறது. சீனுவைக் குற்றவாளியாக்கியதற்காக சமரச கமிட்டியில் அங்கம் வகிக்க நேரு அரசாங்கம் மறுத்து விட்டதொன்றே இதற்குச் சரியான சான்று. ஆம்; அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு வெறியை எதிர்த்து நேரடி நடவடிக்கையில் இறங்கியிருக்கும் கம்யூனிஸ்டு அல்லாத நாடு, இந்தியா ஒன்றுதான். இதனால் முதலாளித்துவ நாடுகளின் வெறுப்பிற்கு இந்தியா ஆளாகியிருக்கிறது. இந்த நல்ல சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு போன்ற இடதுசாரி கட்சியினர், நேரு அரசாங்கத்தை ஆதரித்து காங்கிரசோடு கூட்டணி வகுப்பார்களாயின், நேரு அரசாங்கம் முதலாளித்துவ நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை துணிச்சலாக மேற்கொள்ள முடியும்.

'உலக அரசியல்' என்ற கம்யூனிஸ்டு பத்திரிகை, காங்கிரஸ், தமிழரசுக் கழகம் உட்பட சர்வ கட்சியினரும் 'ஐக்கிய முன்னணி' வகுக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்திருக்கிறது. எண்ணம் நல்லதுதான்; ஆனால், எண்ணத்தை இயக்கமாக மாற்றுவதற்கான சூழ்நிலை இல்லை. அந்த சூழ்நிலை உருவாகவேண்டுமானால், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி முதலில் தன்னையே திருத்திக்கொள்ள வேண்டும். ஐயத்திற்கிடமற்ற வகையில் தனது எதிர் கால அரசியல் வேலைத் திட்டங்களை அறிவிக்கவேண்டும். மற்றும், காங்கிரஸ் எதிரிகள் யாராயிருப்பினும் அவர்களோடெல்லாம் கூட்டணி, வகுக்க வேண்டுமென்ற கொள்கையில் செல்வது, நாட்டிற்கு நன்மை பயக்காது. காங்கிரசை எதிர்க்கிறார்கள் என்பதற்காக, கருஞ்சட்டைப் பாஸிஸ்டுகளுடன் உறவு கொள்கிறது கம்யூனிஸ்டு கட்சி. இந்து மகா சபையும், அதன் பாஸிஸ்டு தளமான ஆர். எஸ். எஸ்ஸும் கூடத்தான் காங்கிரஸ் அரசாங்கத்தை எதிர்க்கின்றன. அவற்றோடும் கம்யூனிஸ்டுகள் கூட்டணி வகுக்க முடியுமா? முடியாதென்றால், வகுப்புவாத அடிப்படையில் பாஸிஸ முறையில் நடத்தப்படும் திராவிடக் கழகத்தோடும் அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தோடும் கூடத்தான் கம்யூனிஸ்டு கட்சி கூட்டணி வகுக்க முடியாது. இதைக் கட்சித் தலைவர்கள் சீற்றம் கொள்ளாமல் சிந்திப்பார்களாக!

ராஜாஜி, திருக்குறளுக்கு அரசியல் கண்ணோட்டத்துடன், ஆங்கில மொழியில் உரையெழுதியவர். ஆகவே,

> செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
> வெருவந்து வெய்து கெடும்.

என்ற குறள் வழி, காவல் தடுப்புச் சட்டத்தைத் தற்காலிகமாக அவர் விரும்பலாம்; ஆனால்,

> வேலன்று வென்றி தருவது மன்னவன்
> கோலதூ உங் கோடா தெனின்.

என்ற குறள் வழி மாகாண - மத்திய அரசுகளும், அந்த அரசுகளை இயங்கவைக்கும் அதிகாரிகளும், 'ஜனநாயகப்படி அவர்களை ஆட்டிவைக்கும் காங்கிரசும் செம்மைப்படுமானால், எதிரிகள்கூட சீர்திருந்துவர். இதை ராஜாஜி செய்வார் என்றே நம்புகிறோம்.

—ஆசிரியர்

சிலப்பதிகார காப்பிய அமைப்பு

"வண்டு"

✻

சிலப்பதிகாரம், செந்தமிழ்க் காப்பியம் ஐந்தினுள் சிறந்த ஒன்றாகும். இயல், இசை, நாடகம் என்று, முத்தமிழும் கலந்திருப்பதால், அதை நாடகக் காப்பிய மென்பர் அறிஞர். துவக்கத்திலுள்ள பதிகமும் இந்தக் கருத்துக்குத் துணை புரிகிறது. ஆம். ஒருவருக்கு மற்றொருவர் கதை சொல்லும் போக்கில், காப்பியம் முழுவதையும் சுருங்கக் காட்டும் முதற்காட்சியாக அமைத்திருக்கிறது பதிகம்.

இளங்கோவடிகளும், புலவர் சாத்தனாரும் ஒருங்கிருந்த போது, குன்றக்குறவர் பலர் வந்து கண்ணகிதேவியார் செங்குன்றம் வந்ததையும், பின்னர், தங்கள் கட்புலன் காண விட்புலன் சென்றதையும் வியப்போடு இளங்கோவிடம் கூறுகின்றனர். அதுகேட்ட சாத்தனார் 'யான் அறிவேன் அவள் வரலாறு' எனக்கூறி, சிலப்பதிகாரக் கதையை சுருக்கமாக விளக்கினார். பின்னர் அதை விரிவாக எழுதுமாறு இளங்கோவை வேண்ட, "முடிவுடை வேந்தர் மூவர்க்கும் உரியதாகலின், மூவேந்தரில் சேரவேந்தரின் இளவலும், செந்தமிழ்ப் புலவருமாகிய நீங்களே இயற்றுங்கள்" என சாத்தனார் கூறினார். பின்னர் இளங்கோ, இயற்றிய கண்ணகி வரலாறு சிலப்பதிகாரக் காப்பியமாக மலர்கிறது.

எந்தக் காப்பியமாயினும் சரி; ஏதாவதொரு செந்நெறியை மக்களுக்குப் போதிப்பதற்காகவே அது இயற்றப்பட்டிருக்கும். சிலப்பதிகாரமும் ஒரு செந்நெறியைக் குறிக்கோளாகக் கொண்டே இயற்றப்பட்டிருக்கிறதென்பதை ஆழ்ந்து படிப்போர் அறிந்துகொள்ள முடியும். அந்தச் செந்நெறி யாது? அதைப்பற்றி ஆராயுமுன், சிலப்பதிகாரக் காண்டங்களின் அமைப்பை விளக்க வேண்டுவது அவசியமாகும்.

சிலப்பதிகாரம், மூன்று காண்டங்களாக அமைந்துள்ளது. அவை, முறையே புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்பனவாம். அவற்றுள், சிலப்பதிகாரம் என்ற பெயருக்கேற்ப, சிலம்பைக் காரணமாகக் கொண்டு கதை நிகழுவது மதுரைக் காண்டத்திலாகும். அந்தக் காண்டத்தின் இறுதியிலேயே கதை முடிந்துவிடுகிறது. ஆகவே சிலப்பதிகாரம் புகட்டும் செந்நெறியைக் கதை நிகழும் மதுரைக் காண்டத்திலேயே ஆராய்ந்தறிதல் வேண்டும்.

மற்றும், சிலப்பதிகாரக் காண்டங்கள் மூன்றிலும், காவியத் தலைவியாகிய கண்ணகிக்குள்ள தொடர்பைக் கவனித்தாலும் இந்த உண்மை விளங்கும்.

புகார்க் காண்டத்தில், கண்ணகி, நான்கு இடங்களில்தான்

வாய் திறந்து பேசுகின்றாள். கனாத்திற முரைத்த காதையில்,

"கடுக்குமென் நெஞ்சம் !
கனவினுல் என்கை
பிடித்தனன், போய் ஓர்
பெரும்பதியுள் பட்டோம் ;
பட்ட பதியில்
படாதது ஒரு வார்த்தை
இட்டனர் ஊரார்,
இடுதேள் இட்டு என்றன்மேல்
கோவலற்-(கு) உற்றதோர்
தீங்கென்று ; அது கேட்டுக்
காவலன் முன்னர் யான்
கட்டுரைத்தேன் ; காவலனோடு
ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று
உண்டால், உரையாடேன் ,
தீக் குற்றம் போலும்,
செறிதொடீஇ ! தீக்குற்றம்
உற்றேனோடு, உற்ற
உறுவனோடு, யான் உற்ற
நல்திறம் கேட்கின்
நகையாகும்......"

என்ற வரிகளில், தான் கண்ட தீய கனவை தனது தோழியான தேவந்தியிடம் கூறும்போது தான், நாம் முதன் முதலாகக் கண்ணகியின் குரலைக் கேட்கிறோம்,

• •

இரண்டாவதாக, 'காமன் கோயில் சென்று வழிபாடு நிகழ்த்தினுல் கணவனை அடையலாம்' என்று தேவந்தி கூறிய போது அச்செயல்,

" பீடு •அன்று "

"எம் குலத்துக்குப் பெருமை தருவதன்று" எனக் கூறுகின்றாள்.

மூன்றாவதாக, மீண்டும் தன்னையடைந்த கோவலன்,

"பரத்தையின்பால் கைப்பொருள் அனைத்தையும் தொலைத்து வறியனானேன்" எனக்கூறி வருந்தியபொழுது,

" சிலம்புள கொண்மின் "

என்கின்றாள்.

நான்காவதாக, நாடுகாண் காதையில், வழி நடந்த இளைப்பால் சோர்வடைந்த கண்ணகி, கோவலனை நோக்கி,

" மதுரை மூதூர் யாது ?"

"மதுரை நகர் இன்னும் எத்தனை தூரத்திலிருக்கின்றதோ?" எனக் கேட்கின்றாள்

ஆம்; புகார் காண்டத்தில், கண்ணகியின் பேச்செல்லாப் பதின்மூன்றே வரிகளில் முடிந்துவிடுகிறது. அந்த வரிகளிலும் கண்ணகி தெரிவிக்கும் கருத்துக்கள், பின்னல் நிகழவிருக்கும் மதுரைப் புரட்சிக்குத் தோற்றுவாயாக அமைகின்றனவேயன்றி புகார்க் காண்டத்திற்கு நேர் தொடர்புடையன அல்ல.

வஞ்சிக் காண்டத்திலும், மானிட யாக்கையோடு கண்ணகி கூறியதெல்லாம்,

"மணமதுரையோடு அரசுகேடுற
வல்வினை வந்து உறுத்தகாலை
கணவனை அங்கு இழந்துபோந்த
கடுவினையேன் யான்......"

என இரண்டே வரிகளில், குன்றக் குறவருக்கு மதுரைப் புரட்சியையும், தன் மனத் துயரையும் கூறியதன்றி வேறில்லை இதன்படிப் பார்த்தால், கண்ணகியின்

பேச்செல்லாம்-அவ் வீராங்கனை நிகழ்த்தும் புரட்சியெல்லாம் மதுரைக் காண்டத்தில்தான் அடங்கியிருக்கின்றன என்பது புலனாகும். ஆகவே, மதுரைக் காண்டத்தைக் கதையாகவும், புகார்க்காண்டத்தை அக்கதையின் முன்னுரையாகவும், வஞ்சிக் காண்டத்தை முடிவுரையாகவுமே கொள்ளவேண்டும்.

" சிலப்பதிகார ஆராய்ச்சி " என்ற பெயரால் வெளிவந்த நூல்கள் பலப்பல. அவையனைத்தும் கண்ணகி தேவியாரின் அறக் கற்பொன்றையே போற்றிப் புகழ்ந்தன. கண்ணகிக்கு கதிரவன் சாட்சி கூறுவதும், வெட்டுண்ட கோவலன் கண்ணகி தொட்ட அளவிலேயே உயிர் பெற்றெழுவதும்; அழற் கடவுள் கண்ணகி முன் தோன்றி ஏவல் கேட்பதும்; மதுரைத் தெய்வம், கண்ணகிக்குக் காட்சியளித்து அவளது முற்பிறப்பின் வரலாறு உரைப்பதும்; தேவர்களும், கோவலனும் இந்திர விமானத்தில் வந்து, கண்ணகியை வானுலகம் அழைத்துச் செல்வதும் அவளது அறக் கற்புக்குச் சான்றுகளாகக் காட்டப்படுகின்றன.

மேற்சொன்னவெல்லாம், மதுரைக் காண்டத்தில் வரும் சம்பவங்களேயென்றாலும், அவை கதையை அழகுபடுத்தும் கற்பனைகளேயன்றி, உண்மை நிகழ்ச்சிகளல்ல. மக்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட - அவர்தம் அறிவுக்கும் எட்டாத அருட்செயல்களை, கற்பனையாக வன்றி வரலாறாகக் கொள்வது அறிவுடைமையன்று.

மற்றும், பெண்ணுலகிற்கு அறக் கற்பைப் போதிக்கவே இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார் எனக் கூறுவோரின் கூற்றை மறுக்கச் சிலவற்றைக் கூறுவோம்:

சிலப்பதிகாரத்தில் கண்ணகி தேவியை, மூன்று காண்டங்களிலும் மூன்று பண்பினளாக நமக்கு அறிமுகப்படுத்துகிறார் இளங்கோவடிகள். ஆம்; புகார்க் காண்டத்தில் அறக் கற்பினளாகவும், மதுரைக் காண்டத்தில் மறக்கற்பினளாகவும் வஞ்சிக் காண்டத்தில் வரங்கொடுக்கும் தெய்வக் கற்பினளாகவும் கண்ணகி காட்சியளிக்கிறாள்.

சிலப்பதிகாரம் அறக்கற்பை வலியுறுத்தவே எழுதப்பட்டதென்றால், கதை புகார்க் காண்டத்திலேயே நிகழவேண்டும். அப்படிக்கின்றி, கதை முழுவதும்மதுரைக் காண்டத்திலேயே அமைந்து கிடப்பதால், அதில் கண்ணகி நிகழ்த்தும் மறக்கற்பை-வீரப் புரட்சியைப் பெண்ணுலகுக்குப் போதிப்பதே இளங்கோவடிகளின் எண்ணமாதல் வேண்டும்.

புகார்க் காண்டத் துவக்கத்தில், கண்ணகி கணவனோடு கூடி இல்வாழ்க்கை நடத்துகின்றாள். பிறகு கணவனைப் பிரிய நேர்ந்தபோது சகிப்புத் தன்மையை மேற்கொண்டு அற வாழ்வு நடத்துகின்றாள். இந்த அறக்கற்பு வழிப்பட்ட வாழ்க்கை, இளங்கோ காலத்துத் தமிழ்ப் பெண்களுக்குப் புது நெறியன்று; தொன்று தொட்டு

வந்த பண்பேயாகும். ஆகவே, மதுரைக் காண்டத்தில் வரும் மறக் கற்பினளான கண்ணகியே மண்ணக மாந்தருக்கு வழிகாட்டி என்பதில் ஐயமில்லை.

சிலப்பதிகாரத்தை அரசியல் கண்கொண்டு ஆராய்வதன் மூலமே அதன் கருப்பொருளைக் காண முடியும். கதை நிகழும் மதுரைக் காண்டத்தை ஆராய்ந்து கருப்பொருள் காண்போம் :

குற்றமற்ற கோவலனைக் கள்வனென்று பொற்கொல்லன் சொன்னதை நம்பி, பாண்டியன் நெடுஞ்செழியன் அவனைக் கொலைக்குள்ளாக்குகிறான். கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட கண்ணகி, நேரே கொலைக்களம் சென்று, அங்கே தன் கணவன் தலை வேறு உடல் வேறாக வெட்டுண்டு, ரத்தத்தில் மூழ்கிக் கிடப்பது கண்டு ஆத்திரம் கொள்கிறாள்; அழுது துடிக்கிறாள். பின்னர், இந்தக் கொலைக்குக் காரணமான அரசனை அணுகி அவனுடன் சொற்போர் புரிந்து அவனது செங்கோல், கொடுங்கோலானதை மெய்ப்பிக்கின்றாள். கண்ணகியால் தனது தவறை யுணர்ந்த அரசன், அக்கணமே உயிர் விடுகின்றான்; அவனது அரசும் அழிகின்றது. கடுங்கோபங் கொண்ட கண்ணகி, கொடுங்கோலாட்சிக்கு உட்பட்டமைக்காக மதுரையைத் தீக்கிரையாக்குகிறாள். பின்னர், மதுரை நகர் நீங்கி பதினைந்து நாட்கள் வழி நடந்து சேர நாடடைந்து அங்கு செங்குன்றத்தின் மீதேறிய பின்னர், கண்ணகியின் மண்ணுலக வாழ்வு முடிகின்றது. இதுவே, சிலப்பதிகாரக் கதையின் சுருக்கம்.

இந்தக் கதையிலிருந்து மக்கள் அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், அநீதி வாய்ந்த அரசை எதிர்த்துப் போரிட்டு அழித்து முடிக்கும் கண்ணகியின் புரட்சிச் செயலேயாகும்.

சிலப்பதிகாரக் காலம்வரை அரசன் தவறிழைத்தால், அவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் உரிமை குடி மக்களுக்கு உண்டு என்ற எண்ணம் தமிழ் மக்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டி வேந்தன், பகை மன்னரை எதிர்க்கப் புறப்பட்ட காலை தான் போரில் தோல்வியுற்றால்,

"என்னிழல் வாழ்நர்
சென்னிழற் காணாது
கொடியன் எம்இறை எனக்
கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங்
கோலேன் ஆகுக !"

எனக் கூறியதாலும்,

இறைகடியன் என்றுரைக்கும் இன்
னாச் சொல்வேந்தன்
உரைகடுகி ஒல்லை கெடும்.

என்ற குறட்பாவாலும், மன்னன் கொடுங்கோலனாயின், மக்கள் பழிதூற்றுவது மரபு என்

பதை மட்டும் அறிகிறோம். ஆனால், மக்கள் சக்தி கொடுங் கோலை எதிர்த்துப் போரிட்ட செய்தியை சிலப்பதிகாரம்தான் முதன் முதலாக நமக்கு அறிவிக்கிறது.

சிலப்பதிகாரம், அரசியல் புரட்சி நெறியைப் புகட்டவே எழுதப்பட்ட தென்பதற்கு வேறு சில சான்றுகளும் உள.

கண்ணகியின்வீரப்புரட்சியை அறிந்த சேரமன்னன் செங்குட்டுவன், தனது அருகிலிருந்த அரசியை நோக்கி, "பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் நீத்த அக்கணமே தானும் உயிர் விட்ட கோப்பெருந் தேவி; தன் கணவனை இழந்த சீற்றத்தோடு நம் நாடடைந்த கண்ணகி தேவி ஆகிய இருவரில், என் அரசி வியத்தற்குரியவள் யார்?" என்று கேட்கின்றான். அதற்கு அரசமாதேவி,

> "காதலன் துன்பம் காணாது கழிந்த
> மாதரோ பெருந்திரு உறுக வான
> கந்து;
> அத்திறம் நிற்க,நம் அகல்நாடு
> அடைந்த விப்
> பத்தினிக் கடவுளை பரசல் வேண்
> டும்......"

"கணவன் உயிர் நீத்த அக்கணமே தானும் உயிர்விட்ட பாண்டிமாதேவியின் அறக் கற்பு தமிழ்ப் பெண்களின் மரபு வழிப்பட்ட மாண்பேயாகும். ஆதலால், அப்பெருமாட்டி தனக்குரிய பேரின்ப வீட்டைப் பெறுவாள். ஆனால், பிறந்த நாட்டைவிட்டு நம் பெரு நாடடைந்த பத்தினிப் பெண்ணும் கண்ணகி தேவியின் புரட்சி, பெண்ணினத்திற்கே வழிகாட்டி. அவளையே நாம் வழிபட வேண்டும்" என்கிறாள்.

அறக் கற்பினளான பாண்டிமாதேவியின் தியாகத்தை விட, மறக் கற்பினளான கண்ணகி தேவியின் வீரப்புரட்சியே சேரமாதேவியின் கருத்தைக் கவர்ந்தது. ஆகவே, வீரக் கண்ணகியின புரட்சி வரலாற்றை பிற்கால மக்களும் அறிந்து கொள்ளவும், பின்பற்றவும் அவ் வீராங்கனைக்கு வழிபாடு நிகழ்தத வகை செய்யுமாறு அரசனுக்கு அறிவிக்கின்றாள்.

மேலும் சிலப்பதிகாரப் பதிகத்துள்ளும்,

> அரைசியல் பிழைத்தோர்க்கு
> அறங்கூற் றுவதூஉம்
> உரைசால் பத்தினிக்கு
> உயர்ந்தோ ரேத்தலும்

என்ற வரிகளில், "அரசன் நெறி தவறின், அறக் கடவுள் மக்கள் வடிவில் தோன்றி தண்டிக்கும் என்பதும், மறக் கற்புடைய மங்கையரை மக்களே யன்றி, மன்னரும் போற்றுவர் என்பதும் சிலப்பதிகாரம் போதிக்கும் செந்நெறிகள்" என்கிறார் இளங்கோவடிகள்.

நாம் மேலே தந்த ஆராய்ச்சி முடிவுகள், பதிகத்தின் கருத்துக்கும் பொருந்துவனவாயிருப்பது கண்கூடு.

வீரக் கண்ணகியின் புரட்சிச் செயல், மண்ணக மாதர்களுக்கு வழிகாட்டி என்று கூறும்போது, மதுரையை எரித்த செயலை நாம் சான்றாகக் கொள்ளவில்லை. கோவலன் கொலையுண்ட பினனர், அறக் கற்பைக் கைவிட்டு மறக்கற்பை

மேற்கொண்டு பாண்டியன் உயிரிழக்கும் வரை கண்ணகி நடந்துகொள்ளும் முறையைத் தான் குறிப்பிடுகிறோம்.

சிலப்பதிகாரக் கண்ணகி காட்டிய இந்தப் புதுநெறியை - புரட்சி வழியைத்தான் பிற்காலத்தில் உலகநாடுகள் பலவற்றிலும் மக்கள் - சிறப்பாகப் பெண்கள் - பின்பற்றினர் என்பதை வரலாறு நமக்கு அறிவிக்கின்றது. மக்களின் நன்மைக்கு மாறாக நடந்துகொள்ளும் அரசை எதிர்த்துக்கிளர்ச்சி செய்வதை, இக்கால மக்கள் தங்கள் உயிரினும் மேம்பட்டதொரு உரிமையாகக் கருதுகின்றனர். அரசியல் புரட்சி என்னும்போது, அறப்புரட்சியா, ஆயுதப் புரட்சியா? என்ற கேள்வி எழலாம். இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வருவது அந்தந்த நாட்டின் மக்கள் மனப் பண்பு, காலத்தின் சூழ்நிலை ஆகியவற்றைப் பொருத்ததாகும். ஆனால், அல்வழிப்பட்ட அரசை எதிர்த்துப் போரிட்டு நல்வழி திருத்தும் உரிமை மக்களுக்கு - குறிப்பாகப் பெண்களுக்கு உண்டு என்பதை இந்த இருபதாம் நூற்றாண்டில் எவரும் மறுப்பதில்லை.

சிலப்பதிகாரத்தில் வரும் நம் புரட்சிக் கண்ணகி போல், பிற்காலத்திலும் சில வீராங்கனைகள் உலகில் தோன்றியிருக்கின்றனர். அவர்களில் பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்து ஆயுதங்கொண்டு போர் புரிந்த பிரெஞ்சு தேசத்து ஆர்க் ஜோன் அம்மையாரும், இந்திய சிப்பாய்ப் புரட்சியில் பங்கு கொண்ட ஜான்ஸி ராணியும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

கொடுங்கோலை எதிர்க்கும் அரசியல் புரட்சியில் அறநெறியைக் கலந்தார் காந்தியடிகள். அவரது அறப்போரில் ஈடுபட்டு ஆட்சியைக் கவிழ்க்கப் புரட்சி செய்த வீராங்கனைகளும் பலருண்டு. அவர்களில் கவியரசி சரோஜினி அம்மையார் தலைசிறந்தவர் ஆவார். தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய அறப்போரில் ஆவி துறக்கும் வரை அரசை எதிர்த்துப் போரிட்ட தமிழ் மகளாம் வள்ளியம்மையையும் நாம் மறப்பதற்கில்லை. (தொடரும்)

வருந்துகிறோம்!

திருப்பதி கீழ்த்திசைக் கலைக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் தி. பொ. பழனியப்ப முதலியார் காலமான செய்தி கேட்டு வருந்துகின்றோம். திரு. பழனியப்பர், சித்தூர் தமிழ்ப் பகுதிகள் செந்தமிழ் நாட்டோடு சேர்க்கப்பட வேண்டுமென்பதில் சிந்தையுடையவர். 1947-ல் தமிழரசுக் கழகத் தொண்டர் படையினர் வடக்கெல்லையில் பிரசாரம் செய்யச் சென்றபோது, அவர்களுக்குப் பேராதரவு புரிந்தார் அப்பெரியார். திருப்பதி கல்லூரியில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு திரு. பழனியப்பர் ஆசிரியராக மட்டுமல்லாமல், ஆதரவாளராகவும் இருந்தார். அவரது ஆன்மா அமைதியுறப் பிரார்த்திக்கின்றோம். திரு. பழனியப்பரை பிரிந்து பரிதவிக்கும் குடும்பத்தாருக்கு நமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

விஞ்ஞானமே, எங்கு போவாயோ?

'கமலம்'

மனிதன் பகுத்தறிவுள்ளவன் ஆதலால் எதனையும் துருவித் துருவி ஆராய ஆசை கொள்கின்றான்; எளிதில் எதற்கும் பணிவதில்லை. மர்மம் என்று தோன்றுவதெல்லாம் அவன் மனக் கண் முன் ஒளி பெற வேண்டும்; இது அவன் வேட்கை. புத்தியைச் செலுத்திப் புலமையடைகின்றான்; அவனுக்கு உடைமையாக இப்பொழுது ஒரு நிலம் கிடைத்து விட்டது. புலமை என்னும் இந்நிலத்தில் அவன் பல விளைவுகள் காண முற்படுகின்றான்.

நிலம் பலவகையாதல் போல், புலமையிலும் பலவகையுண்டு. இவற்றுள் விஞ்ஞானம் ஒன்று. ஐம்புலன்களாலும் அறியக் கிடக்கும் உலகமெல்லாம் இயங்கும் வகை எப்படி, எப்படி என்று கேட்டறிந்து நாம் கொண்ட அறிவே விஞ்ஞானம். இயற்கை எவ்வளவு விசாலம் உடையதோ, அதனை ஒட்டிய முறையில் விஞ்ஞானமும் பரந்த ஒரு புலமாகும்.

இயற்கையின் மர்மங்களை விளக்கும் விதிகள் பலவும் மனிதன் கையில் சிக்குண்டு கிடக்க அருள் புரியும் விஞ்ஞானம், அதனை உணர்ந்த புலவர்கள் பலருக்குப் பெரிய பெரிய கனவுகளை எழுப்பியிருக்கிறது. ஏனெனில், அறிவே ஓர் ஆற்றலாம். விஞ்ஞானம் தெரிந்த மனிதனுக்கு ஒரு புதிய சக்தி பிறந்தது என்று சொல்லலாம். இந்த ஆற்றல்தான் அளவிறந்த கனவுகளை மனித உள்ளத்தில் எழுப்பிவிட்டது. இதனால், எதுவும் வேண்டாம், விஞ்ஞானம் ஒன்றே போதும் என்ற மனப்பான்மைக்கும் இடமாயிற்று. விஞ்ஞானம் ஒன்றே, நம் இதய ஆசையைப் பூர்த்தி செய்து, உலகத்தை மாற்றியமைக்கும்; வேண்டும் செல்வமெலாம் வந்து கொடுக்கும்; உலகில் சமாதானம் நிலவ வழி செய்யும்; மனித சமூகம் நோயின்றி நீடூழி வாழ வகை செய்யும்; சுருங்கச் சொன்னால், விஞ்ஞானம் இம் மண் மீது ஒரு மோட்சத்தையே அமைத்து விடும். இவ்வாறு எழுந்த கனவுகள் பற்பல.

சென்ற நூற்றாண்டில் இத்தகைய கனவுகளையே நெஞ்சத்து உணவாக நம்பி வாழ்ந்த மக்கள் பலர். இன்றும் இத்தகு நம்பிக்கையுடையோர் நம்மிடை இல்லாமல் இல்லை.

ஆனால், இந்த நம்பிக்கையை விஞ்ஞானம் தன் கைகொண்டே வெட்டி வீழ்த்திவிட்டது. தன்னை நம்பி எழுப்பிய மனக் கோட்டைகளைத் தானே தகர்த்தெறிந்துவிட்டது. இரு பெரும் போர்களின் விபரீதங்களைக் கண்டு விஞ்ஞானப் பித்தன் திடுக்கிட்டான். போர்க்களத்தில் மாண்டோர் கோடி கோடியென்றால், வீட்டில் இருந்தபடியே தம் நம்பிக்கை இடியுண்டு மாண்டார் எண்ணில் கோடி எனலாம். நூற்றாண்டு

களாக மனத்திலே ஊறிக்கிடந்த விஞ்ஞான நம்பிக்கை இவ்வாறு முடியும் என்று எவரும் எதிர் பார்க்கவில்லை. போரில் சேத மான பொருள்களில் இத்தகை யோர் மன உறுதியை முதலில் வைத்து எண்ணவேண்டும்.

அணுக்குண்டால் விளைந்த நாசமும், நாமறிந்தவைதான். அதனைக் காட்டிலும் பன் மடங்கு அழிவுகளைக் காண உல கம் காத்துக் கொண்டிருக்கிற தாம்! அணுவைத் துளைத்து அதனுள் அகில உலகையும் அழிக்கும் சக்தியைப் புகுத்தும் வேலை இன்னும் பல இடங்களி லும் நடந்தேறி வருகிறதாம். இவற்றையெல்லாம் கண்டு, "விஞ்ஞானமே, இவ்வுலகை எங்கு கொண்டுபோவாயோ?'' என விஞ்ஞானிகளே கேட்கத் தொடங்கி விட்டனர்.

பழைய புறநானூற்றிலே ஒரு பாட்டு உண்டு :

"நாடாக ஒன்றோ ;
காடாக ஒன்றோ ;
அவலாக ஒன்றோ ;
மிசையாக ஒன்றோ ;
எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை,
வாழிய, நிலனே!''

நிலம் எப்படியிருந்தால் என்ன? அதில் வாழும் மக்கள் எப்படி, அப்படியே அதன் நலமெல் லாம். இந்த உண்மையைக் காண்பது கடினம் அன்று; கடைப்பிடிப்பதில் தான் ஆண்மை தெரிய வேண்டும்.

அழிவுக்கு அஞ்சி விஞ்ஞான ஆற்றலை வேண்டுவதில்லை என வெறுப்பதா? அது அறி வன்று ; ஆற்றலன்று ; வீணாக நம் தலைமேல் வெம்மையைக் கொட்டிக் கொள்வதாகும். மனித சமூகம் வளர்ச்சி பெறப் பெற, அதற்கு உதவியாக அமையும் புலமும் வளர்ச்சி பெற வேண்டுவது இயற்கை. விஞ்ஞானம் நமக்கு இனிய பல நலன்கள் செய்து தந்திருப் பதை மறப்பதற்கில்லை. பின் னர் கேடு வருவது எங்கிருந்து?

புலனடக்கும் திறனற்ற அடி மையை அரசனாக்கினோம்; நம் பிக்கை கொள்ள வேண்டிய நல்ல பண்புகளை வெறுத்து, நாசச் செயல்களில் நம் நெஞ் சினை அர்ப்பணம் செய்தோம். உண்மையைத் தேடப் புறப்பட் டோம், உண்மையை நம்பாமல்; கண்டதே உண்மையெனக் கொண்டோம். கொண்டதே நன்மையெனக் கூத்தாடி விட் டோம். உண்மையும் நன்மை யும் நாம் வைத்த பொருளல்ல என்பதை மறந்தோம்.

விஞ்ஞானம் நமக்கு நல்லவை விளைவிப்பதும், அல்லது நம் மையே அழித்து நாசஞ் செய்வ தும், நம் உள்ளம் அதனை அடக்கி ஆள்கின்றதா அல் லது ஆற்றலில்லாத பலவீன உள்ளமா என்பதைப்பொருத்த தாகும். 'அவன்' ஒருவனுக்கு அடங்கிய உள்ளம், அன்பி னால், யாவற்றையும் அடக்கி யாளும் ஆண்மையும் பெறும்.

'தமிழ் முரசு'
(மாத வெளியீடு)
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
வருட சந்தா ரூ. 3.

கண்ணீரிலே கலந்த கவிதை

—ம. பொ. சி.

தலைப்பைக் கண்டவுடனே, "என்ன, ஒப்பாரியையும் கலை வரிசையில் வைத்துக் கணக்கெடுப்பதா?" என்று கலையுணர்வில் தலைசிறந்த அறிஞர்கள் அங்கலாய்க்கலாம். ஆனால், ஒப்பாரிப் பாடலின் வளத்தையும் வரலாற்றையும் ஆராய்ந்தால் மங்கையரின் கண்ணீரிலே கலந்துவரும் அந்தக் கவிதையும் கலையுலகம் மதிக்கத் தக்கதே என்பது புலனாகும்.

இறந்தாருக்கு இரங்கி, இருப்பார் அழுவது மனித வர்க்கம் முழுவதுக்குமான பொதுப் பண்பு. என்றாலும், இறந்தாரைப் பற்றித் தம்முடைய இதயத்தே எழும் எண்ணங்களை இசையோடு கலந்து வெளியிட்டு அழுவது தமிழகத்தைத் தவிர வேறு நாடுகளில் இல்லை. அதனால்தான் தமிழினத்தின் பெருமை கூறவந்த நாமக்கல் கவிஞர்,

இழவில் அழுதிடும் பெண்கூட
இசையோ டழுவது கண்கூடு

என்று ஒப்பாரிக் கலையை உவமை கூறினார்.

இறந்தவரின் பிணத்தை கூடத்தின் நடுவே கிடத்தி, அதன் இரு மருங்கிலும் பெண்கள் வரிசையாக அமர்ந்து எதுகை இடாமல் மோனை முறியாமல் கவிபாடி அழுவதை இன்றும் தமிழகத்தில் கண்டுவருகிறோம். நின்றவண்ணம் தம் இருகைகளாலும் மார்பில் அறைந்து கொண்டு அழுவதும் அல்லது வட்டமாக நின்று கைகளைக் கோத்துக் கொண்டு இடைவிடாது சுற்றிக் கொண்டே சாய்ந்தாடி அழுவதும் ஒப்பாரிக் கலையின் மற்றொருருவகையாகும்.

ஒப்பாரிக் கலை, தமிழகத்தில் தொன்றுதொட்டே இருந்து வருவதாகத் தெரிகிறது. புறநானூறு 25-ம் பாடலில் போர்க்களத்தே ஆட்வரைப் பலி கொடுத்த மங்கையர்,

"முலைபொலி யாகம் உருப்ப நூறி"

முலை விளங்கும் மார்பில் அனலெழும்படியாகத் தம் கைகளால் அறைந்துகொண்டு அழுததாகக் கூறப்படுகிறது. பண்டைப் புலவர்கள் தாம் இயற்றிய காவியங்களிலும் இந்த ஒப்பாரிக் கலைக்கு இடமளித்துள்ளனர். சிலப்பதிகாரத்துள் கொலைக்களத்தே வெட்டுண்டு கிடந்த கோவலன் பிணத்தின் மீது விழுந்து அழுகின்ற கண்ணகி,

மன்பதை அலர்தூற்ற
மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான்
அவலங்கொண் டழிவலோ!

பார்மிகு பழிதூற்றப்
பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணா
இதுவென உரையாரோ!

என்றெல்லாம் பாடுகிறாள். இந்த வரிகள் தற்காலப் பெண்கள் பாடும் ஒப்பாரிப் பாவனையில்

அமைந்திருப்பதைப் பார்க்கிரேம். கவியரசர் கம்பரும் தாம் இயற்றிய இராம காவியத்தில் இந்த ஒப்பாரிக் கலையை நினைவூட்டுகிருர். தயரதன் இறந்த செய்தியை பரதன் மூலம் அறிந்த சீதை,

மண்ணெனுஞ் செவிலிமேல் வைத்த கையினள்
பண்ணெனுங் கிளவியாற் பன்னி யேங்கினள்.

இடது கையை நிலத்திலூன்றிய வண்ணம் பண்ணோடியைந்த பாடல்களைப் பாடி தனது ஆற்ருமையை வெளிப்படுத்தி அழுதாளாம்.

மைந்தன் இந்திரசித்தும், மன்னன் இராவணனும் இறந்துபட்ட காலையில் அவர்களுடைய உடலருகே அமர்ந்து மண்டோதரி அழுகின்ற இடங்களிலும் ஒப்பாரிக் கலையின் அழகை வெகு அருமையாகக் கையாண்டிருக்கிருர் கம்பர்.

சாதாரணப் பெண்கள் பாடும் ஒப்பாரிப் பாட்டில் உள்ள கருத்துச் செறிவும் கற்பனை அழகும் கவிச்சக்ரவர்த்திகளைக் கூட மயங்க வைத்ததுண்டு என்பதற்குக் கம்பரைப் பற்றிக் கர்ண பரம்பரையாக வழங்கி வரும் கதையொன்று சான்று கூறுகிறது. அந்தக் கதை வருமாறு :

ஒரு சமயத்தில் கம்பர் ஒரு கிராமத்தில் தங்க நேரிட்டது. அப்போது ஒரு நாள் அதிகாலையில் படுக்கையை விட்டெழுந்து வெளியே சென்ருர். வழியில், ஒரு வீட்டினின்று இளம்பெண் ஒருத்தியின் அழுகுரல் கேட்டது. அவ்வழுகையினூடே ஒப்பாரியாக, "சில்லென்று பூத்த" என்ற சொற்ருடர் அவள்வாயினின்றும் வெளிக்கிளம்பியதும் அடுத்த வார்த்தைகள் வெளிவராதவாறு அவள் வாயை யாரோ பொத்தி அழுகையை அடக்கியதாகத் தெரிந்தது. அதைஅறிந்த கவிச்சக்கரவர்த்தி கம்பர், "சில்லென்று பூத்த" என்ற சொற்ருடர் கவிச்சுவை வாய்ந்ததாயிருந்தமையால் அதன் பின்னர் அவள் சொல்ல விரும்பியது எதுவாக இருக்கலாம் என்பதை அறிய ஆவல் கொண்டார். ஆனல், அவரது கற்பனைக்கு அது எட்டவில்லை. அக்கம்பக்கத்து வீட்டார்களை அணுகித் தமது மனநிலையைத் தெரிவித்து அதைத் தெரிந்துகொள்ள என்ன செய்யலாமென்று கேட்டார். அவர்கள் அந்த அழுகுரல் சமீபத்தில் தன் நாயகனை இழந்த இளம் விதவையினுடையதெனவும், நாயகனை நினைந்து அதிகாலையில் விழித்தெழுந்து அழுவது வழக்கமெனவும், அங்ஙனம் அழுவதை நிறுத்துவது பக்கத்திலிருக்கும் வயதான பெண்களின் கடமையெனவும் தெரிவித்தனர். கவிச்சுவையில் ஆர்வங்கொண்ட கம்பர் மறுநாளும் அங்கேசென்று அந்த வீட்டின் தெருத்திண்ணையில் தங்கியிருந்தார். வழக்கம் போல அழுகைக் குரல் ஒப்பாரியுடன் வெளிக் கிளம்பிற்று. அவரது அதிர்ஷ்டவசமாக அவள் வாயைப் பொத்த ஆட்கள் சற்றுப் பின் தங்கிவரவும் நேரிட்டது. அவ்விதவைப் பெண்,

சில்லென்று பூத்த சிறுநெருஞ்சில்
காட்டினுள்ளே—என்னை
நில்லென்று சொல்லி நிறுத்திவைத்
துப் போனீரே!

என்று பெருமூச்செறிந்து புலம்பியழுதாள். அந்தப் பாட்டின் சொற்சிறப்பும் பொருள் சிறப்பும் கம்பரைப் பரவசப் படுத்தின.

படித்தறியாப் பாமரப் பெண்கள் கூட இந்த ஒப்பாரிக் கலையில் மிகப் பண்பட்டு விளங்குகிறார்கள். இறந்தவரின் வாழ்க்கை வாலாற்றுக்கேற்பத் தமக்கு அவரோடிருந்த தொடர்புக்குப் பொருந்தப்பாடியழும் திறமை கல்வியறிவற்ற பெண்களுக்கும் அமைந்திருப்பது அதிசயிக்கத்தக்கதாகும். அடுப்பூதும் மங்கைக்குப் படிப்பெதற்கு?'' என்று ஆணினம் நீதியற்ற வகையில் பெண்ணினத்தை அடுப்பங்கரையளவில் அடக்கி வைத்தது. ஆனால், அவ்வையின் வழி வந்த பெண் குலம் தம் கலைத் திறத்தை இன்னும் அடியோடு இழந்து விடவில்லை.

இக்காலப் பெண்களின் ஒப்பாரிப் புலமைக்குச் சில எடுத்துக் காட்டுகள் கூறுகின்றேன். ஒரு அம்மையாரின் மருமகள் திருமணமாகி மாமி வீடு வந்த மறு வாரத்திலேயே இறந்துவிட்டாள். உயிர் நீப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கூட அம்மங்கை இறந்துவிடுவாளென்று எவரும் எண்ணியதில்லை. எதிர்பாராத நிலையில் மருமகளைப் பறிகொடுத்த அவ்வம்மையார், தன் உள்ளத்தில் தோன்றிய எல்லையற்ற துக்கத்தை ஒப்பாரியில் பாடியழக் கேட்டேன். இறந்தவளின் திருமணத்துக்கு பந்தற் கால்கள் நட்ட குழிகள்கூட மூடப்படா முன்னமே அப்பெண்ணின் வாழ்க்கைமுடிந்து விட்டது. திருமணப் பந்தலில் மண மக்கள் மாற்றிக்கொண்ட பூமாலைகள் வீட்டின் ஒரு புறத்தே தொங்கிய வண்ணம் காட்சியளித்தன. பலவித வண்ணங்களால் சித்திரம் எழுதப் பட்டு மணப்பந்தலில் வைக்கப் பட்ட கூறைப் பானைகள் வீட்டின் ஒரு மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்தக் காட்சிகளையெல்லாம் கல்லையும் உருக்கும் வண்ணம் அவ்வம்மையார் கவிதை தீட்டிப் பாடுவதைக் கேளுங்கள்:

பந்தக்கால் நட்ட இடம்—அங்கே
பள்ளம் மறையலேயே
முகூர்த்தக்கால் நட்டஇடம்-அங்கே
மே(ா)டு உயரலேயே

பூமாலை சூட்டியல்லோ—உன்
பெற்றோர்
புண்ணியனைத் தேடிவைத்
தார்—அந்தப்
பூமாலை வாடுமுன்னே—நீ
பொன்னுலகம் போனதென்ன ?

மணவறையில் கைப்பிடித்த கணவனுடன் பள்ளியறை புகுந்த பத்தாம் நாளுக்குள் பிணமான நிலைகண்டு இரங்கியழும் அவ்வம்மையார், பழிகூறிப் பாடும் பகுதியைப் பார்ப்போம்:

கூறைசால் கொண்டுவந்த - அந்தக்
குயவனும் கண்குருடா ?
சேலை நெசவுசெய்த—அந்தச்
சேணியனும் கண்குருடா ?

என்று, நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்துத் தொழில் புரியும் குயவரையும் சேணியரையும்

குறைகூறி அழுத மறுகணமே, 'வேதம் ஓதி வேள்வி பெருக்கிச் சித்துகள் புரியும் வித்தைகளறி வோம்' என்று பேசும் வேதியரின் சாஸ்திர ஞானத்தையும் சாடிப் பாடுங்கால்,

பஞ்சாங்கம் பார்க்கவந்த—அந்தப்
பார்ப்பானும் கண்குருடா?

என்று பதறியழுதார். அவ்வம்மையாரின் பேத்தி ஒருத்தி இறந்துவிட்டாள். பல மாதம் பாடுபட்டு மருத்துவம் செய்தும் பலனற்றுப் போன நிலைமையைப் பாட்டாகத் தீட்டுவதைப் பாருங்கள்:

பாடி வைத்தியன் - அவன்
பஸ்பத்தால் தீருமென்றான்

ஓச வைத்தியன் - அவன்
ஒருநாளில் தீருமென்றான்

சூளை வைத்தியன் - அவன்
சூரணத்தால் தீருமென்றான்

மலையாளத்து மாந்திரிகன் - அவன்
மந்திரத்தால் தீருமென்றான்

தேவி கோவில் பூசாரி—அவன்
திருநீற்றால் தீருமென்றான்

(மருத்துவம் முடிவதற்குள்)

ஆகாச மாத்திரையை—நீ
அள்ளியுண்ண நீதியுண்டோ!

[பாடி—ஓர் ஊர்; ஓசர்—ஒரு சாதியினர்; சூளை—சென்னையில் ஒரு பகுதி.]

பெண்கள் இறந்தாருக்கு ஏங்கியழுவதோடல்லாமல், இருந்தாரைத் தாக்கிப் பாடுவதும் உண்டு. இதை மேற்சொன்ன அம்மையாரைக் கொண்டே அறிந்தேன். அவ்வம்மையாரின் அண்ணன் பரம சாது. அண்ணியாரோ வாய்ப்பட்டி. கணவனையும் நடுங்கவைக்கும் காளிதேவி என்றாலும் தகும். எனவே, தமது அண்ணியாரை இழவு இல்லங்களில் சந்திக்க நேர்ந்த போதெல்லாம் இவ்வம்மையார் அவரைத் தாக்கிப்பாடி அழுவதுண்டு. அதில் பின்வரும் பாட்டு ஓர் எடுத்துக்காட்டு:

காரைமுள்ளு கீரைமுள்ளு—
உனக்குக்
கை நிறைந்த ஊவாமுள்ளு—அந்த
ஊவா முள்ளுப் பாவியண்டை—நீ
ஊடாட வல்லவனோ.

இவ்வம்மையார் தற்குறியல்ல; நல்ல தமிழ் ஞானம் உடையவர். தேவாரம், திருவாசகம் போன்ற சமயத் தமிழ் நூல்களைப் பழுதின்றிப் பாடும் பண்புடையவர். அப்படியிருந்தும், குடும்பக் கலைகளான ஒப்பாரி, தாலாட்டுப் போன்ற கலைகளையும் நன்கு மதிப்பவர்.

ஒப்பாரி பாடியழும் வழக்கம் பொதுவாகத் தமிழ்ப் பெண்கள் எல்லோரிடமும் இருந்து வருகிறது. என்றாலும், பழங்குடித் தமிழ் மக்களிடமே இது ஒரு கலை என்று கூறக்கூடிய அளவுக்குவிளங்குகிறது. பெண் பிறப்பே பாவப் பிறப்பு என்ற எண்ணம் வளர்ந்து வந்ததன் விளைவாகப் பெண்கள் சம்பந்தப்பட்ட எல்லாக் கலைகளும் எளனத்துக்கும் இழிவுக்கும் உள்ளாகிவிட்டன. மேலும், நாகரிக வளர்ச்சி காரணமாக; ஒப்பாரி தாலாட்டு ஆகிய இசையோடியைந்த குடும்பக் கலைகள் தமிழகத்தில் மறைந்து வருகின்றன. ஆனால், பண்டை நாள் குடும்பக் கலைகளுக்கு மதிப்புத் தரும் பெண்கள் மேற்சொன்ன அம்மையாரைப் போன்று ஒரு சிலரேனும் இருந்து வருகின்றனர். அவ்

"தமிழ்க் கலைக்கு இழிவு"

(டி. கே. ஷண்முகம்)

●

கதையல்ல, கட்டுரைப்பதல்ல; வேதனை நிறைந்த உள்ளத்திலிருந்து வெளிவரும் வார்த்தைகள்!

மூவேந்தருள் ஒருவரான சேரர் ஆண்ட திருநாட்டிலே, கற்பரசி கண்ணகிக்குக் கல் நாட்டிய காவலன் வாழ்ந்த பெருநாட்டிலே, "மலை ஞாலம்" என்று மொழியப்படும் மலை நாட்டிலே; தமிழ் மொழிக்கும் - தமிழ்க் கலைக்கும் - தமிழ்க் கலைஞர்களுக்கும் எதிர்ப்பு; இழுக்கு; கேலி; கிண்டல்!

"தமிழை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்" எனக் கூறி இமயம் வரை படையெடுத்துச் சென்றான் சேரன் செங்குட்டுவன். அந்த மறத் தமிழனை ஈன்ற "மலை ஞாலத்தார்" இன்று "மலையாளத்தார்" ஆகிவிட்ட காரணத்தால் பெற்ற தாயைப் "போ வெளியே!" என்கின்றனர்.

பீடிகை பெரிதாகத் தோன்றும் சிலருக்கு. அடிபட்டவனுக்குத்தான் நோவின் அருமை தெரியும். இது உடலிலே விழுந்த அடியல்ல; உள்ளத்திலே விழுந்த அடி. நடந்ததைக் கூறுகிறேன்; தமிழர் சிந்தித்துச் செயலாற்றட்டும்.

டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகசபை சென்ற ஆண்டு நிறுத்தப்பட்ட சேதி உங்களில் பலருக்குத் தெரியும். பொருட்காட்சிகளிலும், 'நாடகக் கழக அரங்கிலும் பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் பிரிந்த நடிகர்களை ஒருங்கு கூட்டி அவ்வப்போது நாங்கள் நாடகங்களை நடித்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள்......

இந்நிலையில், தென் கோடியிலே மலையாளத்தார் ஆதிக்கத்திலே வாழும் நாஞ்சில் தமிழகத் தோழர்கள் சிலர், எங்களைப் பிறந்த நாட்டிற்கு அழைத்து பெருமைப் படுத்த எண்ணினர். அவர்கள் விருப்பத்தை மறுக்க இயலாது ஏற்றுக் கொண்டு திருவனந்தபுரம், ஆலப்புழை, நாகர்கோவில் ஆகிய நகரங்களிலே சில நாடகங்களை நடிக்கச் சென்றோம்.

ஏறக்குறைய இருபது ஆண்டுகட்கு முன் மலையாள நாட்டிலே நாங்கள் நாடகங்களை நடித்ததுண்டு; அன்று நாங்கள் கண்ட காட்சி வேறு; இன்று மலைநாட்டிலே ஒரு பெரும் மாற்றம்!

திருவனந்தபுரம் எங்கள் பிறப்பிடம்; பிறந்த மண் என்று

மையார் வேறு யாருமில்லை; என்னை ஈன்ற அன்னையார்தான். மணப்பந்தலில் அணிந்து கொண்ட மாலை வாடா முன்னர் மனைவியை இழந்தவன், பந்தக்கால் நட்ட பள்ளம் மறையுமுன் பத்தினியை இழந்தவன் நானேதான்!

— 'கலைக்கதிர்'

பெருமையோடு நடித்தோம். எட்டு நாடகங்கள் நடைபெற்றன. 'ஔவை' நாடகத்திலே மலையாளிகள் காட்டிய வெறுப்பு அவர்களின் இன்றைய மனோபாவத்தை வெளிப்படுத்தியது.

"பெருமை கொள்வாய் தமிழா!" என்று பாரிமகளிர் பாடியபோது, முன் வரிசையிலே உட்கார்ந்திருந்த படித்து நாகரிகம் பெற்றிருந்த மலையாளிகளிற் சிலர், கேலிக் குரல் எழுப்பினார்கள். நாடகத்தினிடையே ஒருவருக்கொருவர் பேசி அமைதிக் குலைவேற்படுத்தி மக்களின் ரஸனையைக் குறைக்க முயன்றது நன்கு தெரிந்தது. திருவனந்தபுரம் நூற்றுக்கு ஐம்பது பேர் தமிழர்கள் வாழும் நகரமாதலால், எதிர்ப்பாளர் எண்ணம் கைகூடவில்லை. மலையாளிகளின் எதிர்ப்புணர்ச்சிக்குத் தக்கவாறு தமிழர்களின் ஆதரவும் பெருமிதத்தோடிருந்ததைக் கண்டோம்.

இரண்டாவதாக, ஆலப்புழைக்குச் சென்றோம். இங்கு தமிழர்கள் சிறுபான்மையினர். திருவிதாங்கூர் கொச்சி யூனியனில் ஆலப்புழை ஒரு பெரிய தொழில் வளம் நிறைந்த துறைமுக நகரம், இங்கே தான் திரைப்படமெடுக்கும் "சினிமா ஸ்டுடியோ" ஒன்றிருக்கிறது. இங்கேதான இன்றைய மலையாளிகளின் மொழி வெறியைக் கண்டோம்.

ஜனவரி 31-ந் தேதி எங்கள் நாடக வாழ்க்கையிலே மறக்க முடியாத ஒரு நாள். ஆலப்புழையிலே 'ஔவையார்' நாடகம் ஆரம்பித்தோம். தொடக்கத்திலிருந்தே தமிழ், தமிழர், தமிழர் வீரம், தமிழர் பண்பு, என்னுமிடங்களிலெல்லாம் மலையாள மக்கள் தங்கள் வெறுப்பை வெளிப்படுத்திக் கொண்டே இருந்தனர்.

ஔவைக் கிழவி தோன்றும் போதெல்லாம் அவர்கள் முகத்திலே ஆத்திரம் வெடித்தது. நேரமாக ஆக அவர்கள் நெஞ்சிலேயிருந்த நஞ்சு, ஒலி வடிவில் வெளிவரத் தொடங்கியது.

சிறு வயதிலே சிற்றூர்களில் நாடகம் நடித்தபோது அவ்வப்போது நரிகள் ஊளையிடுவதை நான் கேட்டதுண்டு. மனிதர்களும் நரிகளைப்போல் ஊளையிட முடியுமென்ற உண்மையை ஆலப்புழை மலையாளிகள் வெளிப்படுத்தினார்கள்.

ஊளையென்றால் நூற்றுக் கணக்கான நரிகள் ஒருங்கு கூடி ஊளையிடுவது போன்ற பேரொலி! மொழிவெறி மக்களை விலங்குகளாகவே மாற்றி விட்டது. படியாத பாமர மக்களல்ல இவர்கள். படித்த கூட்டத்தினர். மதிப்புக்குரிய மாணவர்கள்!

போலீஸோ, பொதுமக்களோ இவர்கள் கூச்சலைத் தடுக்க முன்வரவில்லை. சக்தியற்றவர்களாய் சமாதியுற்றிருந்தனர். சகிக்கமுடியாத நிலையில், என் இதயம் வெடித்தது. பூண்டிருந்த வேடத்தையும் மறக்கச் செய்யும் அளவுக்கு மலையாளிகளின் கூக்குரல் வானைப் பிளந்தது. ஔவையை மறந்

ஷண்முகமானேன். ஒலி பெருக்கியின் முன்னே நின்று இவ்வாறு கூறினேன் :

"அன்பர்களே! ஏன் இவ்வாறு ஊளையிடுகின்றீர்கள்? பாஷையால் தனது எண்ணங்களை வெளிப்படுத்தும் அளவுக்கு மனிதன் உயர்ந்துவிட்டபிறகு ஏனிப்படி ஊளையிட்டு உங்கள் எண்ணத்தை வெளிப்படுத்த முயற்சிக்கிறீர்கள்! உங்கள் செய்கை தவறானது. நாங்கள் முப்பது ஆண்டுகளாக தென்னிந்தியாவில் நாடகங்களை நடித்து வருகிறோம். தென்னிந்தியாவின் பேரறிஞர்கள் அனைவரும் எங்கள் நாடகங்களைப் பார்த்துப் பாராட்டியதுண்டு. வேறு மொழிகளைப் பேசும் அறிஞர்கள் பலரும் எங்கள் நாடகங்களைக் கண்டு மகிழ்ந்ததுண்டு. உங்கள் திருவிதாங்கூர் மன்னரும் இதே ஔவை நாடகத்தைக் கண்டு வியந்து பாராட்டினார்.

"நாங்கள் பொருள் தேடி இங்கு வரவில்லை. திருவிதாங்கூர், நாங்கள் பிறந்த பூமி. இந்த நாட்டிலே எங்கள் நாடகங்களை நடத்த எண்ணிய அன்பர்களின் வேண்டுகோளை மறுக்கவியலாது கம்பெனியைக் கலைத்த பிறகும் கூட எல்லோரையும் மீண்டும் கூட்டி இங்கு நாடகம் நடிக்க வந்தோம்.

"இந்த நிலையில், நாங்கள் 'தமிழர்கள்' என்பதற்காகவே நீங்கள் எங்களிடத்தில் அதிருப்தி காட்டுகிறீர்கள். இது எவ்வளவு பெரிய தவறு என்பதை நீங்கள் உணரவில்லை. கலைநிகழ்ச்சியில் உங்கள் வேற்றுமை உணர்ச்சியைக் காட்டாதீர்கள்.

"கலைஞர்களை மொழி, தேசம் என்ற வேற்றுமைக் கண் கொண்டு யாரும் பார்ப்பதில்லை. உலகத்தின் எந்தப் பகுதியிலும் கலைஞர்களுக்கு வரவேற்பும் வாழ்த்தும் உண்டு. நமது கலைஞர்கள் மேனாடுகளுக்கெல்லாம் சென்று பாராட்டப்பட்டு வருகிறார்கள்.

"மலையாள நாடகமென்று இங்கு யாரும் விளம்பரப்படுத்தவில்லை. தமிழ் நாடகம் என்று தெரிந்துதான் நீங்கள் ஆயிரக்கணக்கில் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் செய்கையிலிருந்து நீங்கள் குழப்பம் செய்யவே வந்திருக்கிறீர்கள் என்பது நன்றாய்த் தெரிகிறது.

"எங்கள் தமிழ்நாட்டிலே நாங்கள் மலையாள நடிகர்களை அழைத்து நாடகங்கள் நடிக்கச் செய்து மாலை மரியாதைகள் செய்திருக்கிறோம்! எங்கள் திரைப் படங்களிலே மலையாள நடிகர்கள் நூற்றுக்கணக்கில் இடம் பெற்றிருக்கிறார்கள். உங்களுடைய இந்த உணர்ச்சியின் விளைவு என்னாகும் என்பதை உணராமல் செய்கிறீர்கள்.

"மகாத்மா காந்தியடிகள் எப்படி உலகுக்கெல்லாம் பொதுவானவரோ, கார்ல் மார்க்ஸ் எப்படி உலகுக்கெல்லாம் பொதுவானவரோ, அதைப் போல்தான் ஔவைக்கிழவியும்

உலகத்திற்கே தாய்போன்றவள். அவளுடைய உபதேச மொழிகள் உலகுக்கே சொந்தமானவை. ஆகவே, வேற்றுமையை அகற்றிவிட்டு அமைதியோடு நாடகத்தைக் கண்டு உணர்வு பெறுங்கள்.'

"உங்கள் கூச்சலால் எங்கள் பெயருக்குக் களங்கம் ஏற்படப் போவதில்லை. பொதுவாக மலையாள நாட்டிற்கே ஏற்படும் களங்கம் இது என்பதை மறந்துவிடாதீர்கள்"

-என்று இன்னும் பலபடக் கூறினேன். பேசி முடிக்கும் வரை சிறிது அமைதி யிருந்தாலும் மீண்டும் அமைதிக் குலைவே காணப்பட்டது.

குழப்பத்தினிடையே ஒருவாறு நாடகம் முடிந்தது. மேற்கொண்டு ஆலப்புழையிலே அமைதியாக நாடகங்கள் நடத்துவது இயலாதெனத் தோன்றியதால் எட்டு நாடகங்களை நடிக்கத் திட்டமிட்டிருந்த நாங்கள் அன்றைய ஒரே நாடகத்தோடு ஆலப்புழையை விட்டு வெளியேற நேர்ந்தது.

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன் திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்திலே கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குப் பேச இடமளிக்க மறுத்துக் குழப்பம் விளைத்த சேதியையும் நாம் மறந்துவிடவில்லை.

மலையாளிகளின் இந்தப் போக்கு தவறென்று எந்த மலையாளத் தலைவரும் அறிவுறுத்தியதாகத் தெரியவில்லை. இந்த நிலை வளருமானல் நாட்டின் கதி என்னகும்?

இந்த வேற்றுமை உணர்ச்சியை தமிழகத்திலிருக்கும் மலையாளிகளிடையே நாம் காட்டத் தொடங்கினல் நாட்டில் எப்படி அமைதி ஏற்பட முடியும்?

லலிதாவும் - பத்மினியும், கோபிநாத்தும்-தங்கமணியும் தமிழகத்திலே அமைதியாக நடனமாட முடியாத நிலை ஏற்படுத்த எத்தனை நாளாகும்? நாடகத்திலும், படஉலகிலுமாக தமிழகத்திலே குவிந்து கிடக்கும் மலையாளிகள் நிலை என்னகும்?

தமிழர்கள் சிந்தித்துத் தீர்ப்பளிக்கட்டும்.

அருந்தமிழ் மொழியிலே உயர்ந்த நாடக இலக்கியமாகப் போற்றப்படும் 'மனேன்மணீய'த்தை இயற்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் பிறந்த ஆலப்புழையிலா தமிழ் நாடகக் கலைக்கு இந்த இழிவு?

இந்த இழிவு ஏதோ ஒரு நாடகக் கம்பெனிக்கோ, டி. கே. எஸ். சகோதரர்களுக்கோ ஏற்பட்ட இழிவல்ல; தமிழருக்கும் தமிழகத்திற்கும் மலையாளிகள் செய்த மானக்கேடு.

மொழிவழி மாகாணப் பிரிவினையைக் "குறுகிய மனேபாவம்" என்று கூறும் பரந்த உள்ளம் படைத்த தமிழர்களுக்கு இந்நிகழ்ச்சி ஒரு படிப்பினையாக இருக்குமா?......

மலையாளம், கன்னடம், தெலுங்கு தமிழ் அனைத்தையும் ஒன்றுபடுத்தித் 'திராவிட நாடு' காண விழையும் எனது அருமைத் தோழர்களுடைய சிந்தனையிலே இந்நிகழ்ச்சி இடம் பெறுமா?

தமிழன் கூக்குரல்

—ப. ரா. கிருஷ்ணசாமி

தமிழ் வித்துவான்களுக்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஒன்றும் வருடத்து இறுதித் தேர்வுக்கு உரிய பாட நூல்களின் அட்டவணையைக் கண்டிருப்பீர்கள். அது பற்றியே இங்கு கூறவந்தேன்.

தேர்விற்கு உரிய நூல்கள் தேர்ந்து எடுப்பதில் சில அமிசங்கள் உண்டு. முக்கியமாக பாடத்திற்குத் தெரிந்தெடுந்த நூல் தாராளமாகக் கிடைக்க வேண்டும். இல்லையேல், தாம் பதிப்பித்துக் கொடுக்க வேண்டும். இரண்டும் இல்லாத நூலைப் பாடமாக வைத்தால் சர்க்கார் தமிழுக்காக எவ்வளவு சிரத்தை காட்டுகிறார்கள் என்பது கூறாமலே விளங்கும். கிடைக்காத பல நூல்களைப் பாடமாக வைப்பதால் ஆண்டு முழுவதும் அல்லலுற்றுப் படித்தும் அவர்களின் தேர்வு "தேய்வு" ஆகிறது. இது தேர்வு நூல் தயாரிக்கும் பரோபகாரிகளின் குற்றமா? அல்லது, படிப்பதற்குத் திறன் இருந்தும் நூலின்றித் தவறும் மாணவர்களின் குற்றமா?

தொல்காப்பியம் - பேராசிரியமும், தொல் - பொருளியல் நச்சினார்க்கினியமும் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறதே, அதை எங்கு வாங்குவது? யாரால் பதிப்பிக்கப் பெற்றது? எவ்வருடம்? அந்நூல் இந்நாள் வரை எப்படி இருப்பு இருக்க முடியும்?

புத்தகக் கடைகள், பதிப்பு இடங்கள், அறிஞர்கள் இவைகளை நாடியும் "இல்லை, இல்லை; இல்லவே இல்லை" என்ற பதிலே செவியாறக் கேட்கப்படுகிறது. இல்லாத நூல்களில் கேட்கும் கேள்விகளுக்கு நூல் "இல்லை" எனப் பதில் எழுதின் தேர்வு "இல்லை" என்பது தவிர வேறு இல்லை என்பது தெளிய அறிந்தது அன்றோ! இவ்வாறிருக்கக் கிடைக்காத நூல்களைப் பாடமாகத் தெரிந்தெடுப்பது முறையா? தங்களிடம் ஒரு நூல் இருந்து வினா கொடுத்துவிட்டால், நூல் இல்லாத மாணவர்கள் எப்படிப் பதில் அளிக்க முடியும்?

பல அறிஞர்களுக்குக் கடிதம் வரைந்து, மேலே கண்ட இரு நூல்களும் எங்கு கிடைக்கும் என்று கேட்டதில் ஒரு அறிஞர் பின்வருமாறு வரைந்து அனுப்பியிருக்கிறார்.

"இன்னும் சின்னாட்களில் சந்திர மண்டலம் சென்று அங்குள்ள கன்னியரை மணந்து இன்புற்று வாழ்ந்தாலும் வாழலாம். ஆனால், தாங்கள் விரும்பிய தொல் - பொருள் - பேராசிரியமும், தொல் - பொருள் - பொருளியல் - நச்சினார்க்கினியமும் நமது சென்னைமாநிலத்திற்குள் - என்? இந்தியா முழுவதிலுமே கூட வாங்க முடியாது என நான் அறிந்த வகையில் கூறுகின்றேன். புத்தகக் கடைகள் எங்கெங்குளதோ அங்கங்கெல்லாம் கொங்குதேர் தும்பி போல் பறந்து தேடிப் பார்த்துவிட்டேன். கிடைக்கவில்லை." என்பது,

இக்கடிதப் பகுதியிலிருந்தே அந் நூல்களின் நிலைமை ஒருவாறு விளங்குகின்றதன்றோ! இதுதானு தமிழ் நாட்டில் தமிழ் மாணவர் நிலை? பால் கிடையாது அழும் குழவி போன்று, நூல் கிடையாது அல்லலுறும் தமிழன் நிலை எண்ணப்படுமா? அறிஞர் பார்வைக்கு விடுகிறேன்.

''தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்வீர்!'' என்று வரகவி பாரதியார் முழங்கிச் சென்றார், உண்மையான விவரம்தான். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யவேண்டுவதும் அவசியமே. ஆயின் தமிழ் வெல்க, வாழ்க என்று முழக்குவது மட்டும் தமிழ் செழிக்க வழியாகுமா? அவ்வாறு முழக்குவது தமிழ் நாட்டில் பிறந்தவர் என்பதற்கு அறிகுறியே ஒழிய, தமிழன் தலைநிமிர்ந்தவன் என்பதற்குச் சான்று ஆகாது. ஏனய்யா, இப்பொழுது தமிழுக்குச் சங்கங்கள் இல்லையா, தலைவர்கள் இல்லையா என்று கேட்கலாம். நிச்சயமாக இருக்கின்றன. பெரிய சங்கங்கள் தலைவர்கள் இருப்பதை மறுக்க முடியாது. அவைகள் இருப்பது எதற்காக? தமிழின் வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டியே அல்லவா! அவ்வாறு வளர்ச்சி அடைவதற்கு அரிய நூல்களைப் பதிப்பித்து உதவுவது முக்கியமான கடமை என்பது கூருமலே விளங்கும்.

''தொல்காப்பியம்'' என்னும் நூல் முழுமுதல் நூல் என்றும், பண்டைத் தமிழரின் பண்பாட்டைக் காட்டும் கண்ணுடி என்றும் தடபுடலாக அள்ளி வீசும் அறிஞர்களைக் காண்கிறேம். அந்நூல் முழுமுதல் நூலா என்பதே கேள்வி. ஒல்காப்புலமைத் தொல்காப்பியனர் முழுமுதல் நூல் வகுத்தது உண்மை. முழுமுதல் நூல் என்னும் அன்பரே, அந்நூல் முழு முதல் நூல் அல்ல என்பதையும் விளக்குகிருர்.

தொல் - எழுத்து, தொல் - சொல், தொல் - பொருள் - அகத்திணை இயல், புறத்திணை இயல், இவைகளை ஒரு கலைக் கூடம் தந்தது. ஒரு கலைக் கூடமோ செய்யுளியலைத் தந்தது நச்சர் உரையுடன். பதிப்பு என்னும் பெயருக்கு மட்டும் இருப்பு நூல் இல்லை. பின்னன் கியலின் பேராசிரியர் உரை எங்கோ, எப்பொழுதோ பதிப்பிக்கப் பெற்றது. பிற இயல்களின் முடிவு எப்படியோ? வித்துவான் தேர்வுக்கு உரிய பேராசிரியமும் பொருளியலும் எங்கும் கிடைப்பதாகத் தெரியவில்லை. பாட அட்டவணையை வெளிப்படுத்தும் ஒரு கலைக் கூடத்தார் அச்சில் இல்லாத நூல்களையும் 'அச்சில்' எனப் போட்டு இச்சிக்கச் செய்து ஏமாற்றுவது தமிழின் புதிய பண்பாட்டின் வகையோ, அல்லது நூலின் பெருக்கம் காட்டும் தொகைக்காகவோ. பதிப்பில் இருக்கும் நூலையன்றி 'அச்சில்' என அச்சில் இல்லாத நூலையும் எழுதுவது அட்டவணை தயாரிக்கும் அன்பர்களுக்குத் தூயம் பேபாடும் காரியமாகத்தான் இருக்கிறது. கிடைக்காத நூலை ஏன் தேர்வுக்கு வைக்கவேண்டு

மென நீங்கள் சர்வகாலசாலை யினரை ஏன் கேட்கக் கூடாது? "ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர் களாய்"த் தமிழர் வாழும்போது நீங்கள் எப்படி உண்மையை உரைப்பீர்கள்?

பேராசிரியமும், பொருளிய லும் ஏதோ ஒன்றிரண்டு அடுக் களைக்குள் மறைமுகமாக எவ ரிடமேனும் இருப்பது ஒழிய, வெளிப்படுவதாகத் தெரிய வில்லை. இந்நிலை நீடிக்குமானல், பதிப்பு அன்பர்களால் தொல் காப்பிய நூலுக்கு ஒறுவாய் (ஊனி) ஏற்படும் என்பதில் ஐய மில்லை.

தமிழ் வளர்ப்பாளர்களே! இதுதானா தமிழ் வளர்க்கும் முறை! நூல்கள் மறையுமானல், மொழியின் வளம் மறையும் என்பதை மறந்துவிட்டீர்களோ! நூற்றுக் கணக்காக மதிப்புரை கள் எழுதிப் பதிப்புகள் செய் கிறீர்களே, தொல் - பொருள் உங்கள் கண்ணிற்கு அழகாகத் தோன்றவில்லையோ? பதிப் பித்து வழங்கச் செயலற்ற ஒரு வர் ஒருதரம் பதித்து பின்னர் வீணேயிருந்து அழியின் அந் நூலால் ஏற்படும் நலன் பாதிப்பு நாட்டிற்கன்றே! இதைத் தெளிந்தேனும் தமிழ் வளர்க் கும் தயாநிதிகளாக இருப்பவர் கள்ளவது இச் செயலில் ஈடுபட் டுப் பதிப்பிக்க வேண்டியது அவசியம்.

உரையுளித்து உணர்வளிக் கும் உத்தமர்களே! உங்களுக் குத் தொல்காப்பியம் சிதைவது பற்றிக் கவலை இல்லையோ!

மொழியைப் பாதுகாக்கும் திறம் நமக்கு இருந்தாலல்லவா மொழிவாரி நாட்டைக் காக் கும் திறம் வரும்.

பிற மொழிக் கலப்பை நச் சென வெறுக்கும் அன்பர் களே! தொல்காப்பியம் நச்சோ?

நூலை, மொழியை, நாட்டைக் காக்கும் நிலைமை என்று ஏற்படு கிறதோ அன்றே நம் மானத் தைக் காத்த நிலையினராவோம்.

•

உண்மை சமஷ்டி!

"உண்மையான சமஷ்டி எப் படி இருக்கவேண்டுமென்ருல், சம அந்தஸ்தும் சம உரிமையும் உடைய சுதந்தரப் பிரதேசங்கள் ஒன்று சேர்ந்ததாய் இருக்க வேண்டும்."

[4—2—38-ல் வார்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானத்தின் பகுதி]

●

சட்டங்கள் உற்பத்தி

உலகில் அநேகருக்கு பிள்ளை களைப் பெற்றுவிடத் தெரிகிறது. ஆனல் பெற்ற குழந்தைகளை எப்படி பராமரிப்பது என்பது மட்டும் தெரிவதில்லை. அது போல், சர்க்காருக்கு சட்டங் களை உற்பத்தி செய்துவிடத் தெரிகிறது. ஆனல், அந்த சட் டங்களை எப்படிப் பராமரிப்பது என்பதுமட்டும் தெரிவதில்லை!

—ம. பொ. சி.

தமிழரசா ? திராவிடஸ்தானா ?

—ம. பொ. சி.

திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயர்களைத் தாங்கிய அமைப்புகள், திராவிடஸ்தான் வேண்டி கிளர்ச்சி செய்கின்றன. திராவிடப் பகுதிகள் எனப்படும் ஆந்திர, கேரள, கன்னட பிரதேசங்களில் திராவிடஸ்தான் கோரிக்கையை ஆதரிக்க ஒருவர்கூட முன்வரவில்லை. அது மட்டுமல்ல; அவர்களில் எவரும் தம்மைத் திராவிடராகக் கருதவும் இல்லை. மற்றும், கோரப்படும் திராவிடஸ்தானின் ஒரு 'மாடலா'க விளங்கும் இன்றைய சென்னை மாகாணத்திலிருந்து தனித்தனியே பிரிந்து போகவும் விரும்பி அவர்கள் கிளர்ச்சி செய்கின்றனர். தமிழ் மக்களில் மிகப் பெரும்பாலோரது கோரிக்கையும், தமிழகம் தனியரசு மாகாணம் ஆகவேண்டும் என்பதேயாம். இந்நிலையில், ஒருசில அரசியல் 'விதவை'களும் பதவிப்பித்து - உத்தியோக மோகம் காரணமாக, வகுப்புவாத' புத்திகொண்டோரையும் சேர்த்துக்கொண்டு திராவிடஸ்தான் கூச்சல் போடுகின்றனர்.

பொதுவாக திராவிடஸ்தான் என்பது, அரசியல் அதிருப்திக்காரர்கள் போடும் கூச்சலேயொழிய, கொள்கையை அடிப்படையாகக் கொண்டு - மக்களின் கோரிக்கையை எதிரொலி செய்யும் ஒரு கோஷமல்ல. என்றாலும், சாதிவெறிக்கு இரையாகிவிட்ட சிலர், 'திராவிடஸ்தான்' என்பதன் போலித்தன்மையை அறிந்துகொள்ளாமலே அதற்காகக் கூச்சல் போடுவோருக்கு ஆதரவு காட்டுகின்றனர். ஆகவே 'திராவிடஸ்தான்' என்பது அதிருப்திக்காரர்கள் போடும்கூச்சல் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. அது எவ்வளவு தூரம் அனுபவசாத்தியமற்றது என்பதையும் அரசியல் ரீதியாக மக்களிடையே விளக்கவேண்டும்.

சாதி, மதம், வர்க்கம், இனம் என்ற பெயர்களிலே மக்கள் சமுதாயம் பல்வேறு குழுக்களாகப் பிரிவுபட்டிருக்கிறது.

முதலியார், செட்டியார், பார்ப்பனர், நாடார் என்பன சாதிக் குழுக்களாகும்.

இந்து, முஸ்லிம், கிருஸ்தவம் என்பன மதப் பிரிவுகளாகும்.

தொழிலாளி, முதலாளி என்பன வர்க்கப் பிரிவுகளாகும்.

தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர், வங்காளியர், மராட்டியர் என்பன இனப்பிரிவுகளாகும். இந்த உண்மைக்கு மாறாக இனம் என்பதற்கு வேறு வகை இலக்கணம் கூறப்படுகிறது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளைப் பேசுவோர் அனைவரும் ஒரே திராவிட இனம் என்றும், அவர்கள் பெருவாரியாக வாழ்வதும்-தொடர்ந்தாற்போல் உள்ளதுமான தென்னிந்திய நிலப்பரப்பு முழுவதும் ஒரே

(திராவிட நாடு) என்றும், திராவிடத்தார்கள் கூறுகின்றனர். மிகப் பிற்காலத்தில் தோன்றிய மொழி ஆராய்ச்சியாளர்கள் -- பெரும்பாலும் ஐரோப்பியர்கள் - தத்தம் நூற்களில் 'திராவிடம்' என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால், ஆரியர் - திராவிடர் என்ற நிறவெறிப் பேயாட்டங்களுக்காகவோ, அல்லது வடநாட்டிலிருந்து தென்னாட்டைப் பிரிக்கவேண்டுமென்ற 'ஸ்தான்' தத்துவத்திற்காகவோ அவர்கள் அப்படிக் கூறவில்லை. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்னிந்திய மொழிகளுக்கிடையே உறவு ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வான் வேண்டி, அம்மொழிகள் அனைத்தையும் ஒருசேரக் குறிக்கும் பொதுப் பெயராகவே 'திராவிடம்' என்ற சொல்லைப் பயன்படுத்தினர்.

மொழித் தொடர்பு, பண்புத் தொடர்பு முதலியவை காரணமாக தென்னாட்டு மக்களைத் 'திராவிடர்கள்' எனக் குறித்த கிரீயர்சன் போன்றவர்களும் பண்டைக்கால இந்தியாவில் வாழ்ந்த மக்களின் இனங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கான ஒரு கருவியாகவே அந்தச் சொல்லைப் பயன்படுத்தினார்கள். இக்காலத்தில் வாழும் தென்னிந்திய மக்களைச் சுத்தத் திராவிடர்களாக அவர்கள் கருதவில்லை. அப்படிக் கருதுவது தவறு என்றும் கண்டித்துள்ளனர். சான்றாக,

"சென்னைப் பகுதியில் உள்ளவர்கள் எல்லாம் திராவிடர்கள் என்றோ அன்றி வங்காளத்தில் உள்ளவர்களெல்லாம் மங்கோலியத் திராவிடர்கள் என்றோ நூல் பிடித்தது போல் பகுத்துக் கூறிவிடத் துணிதல் அறியாமையேயாகும். பண்டைக் காலந்தொட்டே, இந்திய நாட்டின் வடபகுதியிலிருப்போர் தென் பகுதிக்கும் மேற்குப் பகுதியிலுள்ளோர் கிழக்குப் பகுதிக்கும் சென்று குடியேறியமை வரலாற்று உண்மையாகும்.

இவ்வாறு இடம் பெயர்ந்து சென்றோர் தம் இனச்சிறப்பியல்புகளை அறவே ஒழித்து குடியேறிய நாட்டினரோடு பல வகையிலும் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்து வந்திருத்தலும் கூடும். ஆகவே, ஆரியர், திராவிடர் என்பன போன்ற இனப்பிரிவு வகை, ஆராய்ச்சிக் கருவியாகக் கொண்ட பொதுவான அளவுகோலேயாகும்.

ஆம்; தென்னாட்டு மக்கள் திராவிடர்கள் எனப்படுவது வெறும் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட பெயரேயன்றி, அனுபவத்திற்கு பொருந்தக் கூடியதன்று என்பது கிரீயர்சன் கொள்கை.

மேலும், தமிழ் மொழியையோ அம்மொழி பேசும் மக்களையோ குறிப்பிடும்போது, திராவிட மொழி என்றோ, திராவிட மக்கள் என்றோ குறிப்பிடுவதை ஆராய்ச்சி வல்லுநரான கால்டுவெல் ஆட்சேபிக்கின்றார்,

"தமிழ் மொழியையும் அம்மொழி பேசும் மக்களையும்

36-ம் பக்கம் பார்க்க

காங்கிரஸ் தேவையா?

—ஞானம்

அண்மையில், ஆமதாபாத்தில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒரு சிறந்த தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. காங்கிரசுக்குள் வளர்ந்துவரும் குழுவேற்றுமைகளை நீக்கி காங்கிரஸ்காரர்கள் ஒற்றுமைப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது.

காங்கிரஸை விட்டு வெளியேறியவர்களையும் - வெளியேற்றப்பட்டவர்களையும் மீண்டும் உள்ளே கொண்டுவர உதவி புரியும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பொதுவாக இத்தீர்மானம் வரவேற்கத் தக்கதே.

காங்கிரஸ், ஆளும் கட்சியாக மாறிய உடன் அந்த அமைப்புக்குள்ளேயே அபிப்பிராய பேதம் வலுத்து வருகிறது. கொள்கை வேறுபாட்டிற்காக அன்றி, சுயநல குறிக்கோள்களுடன் அமைப்புக்குள்ளேயே குழுவேற்றுமைகள் தோன்றி வருகின்றன.

இந்த வேற்றுமைகளின் எதிரொலி உண்மைத் தேச பக்தர்களுக்கு வேதனையளிப்பதாக இருக்கிறது. மாகாணங்களிலும் சரி, மத்தியிலும் சரி; காங்கிரசுக்காக சொல்லொணுத் தியாகங்கள் புரிந்த தலைவர்களுக்குள்ளேயே வேற்றுமை தோன்றுமானால், - அந்த வேற்றுமைகள் விபரீதப் போராட்டங்களாகவும் உருவெடுக்குமானால் - அந்தத் தலைவர்களைப் பின்பற்றும் தொண்டர்களின் நிலை என்னவாகும்! மேலும், உண்மைத் தியாகிகளிடையே தோன்றும் வேற்றுமைகளை தங்களுக்குச் சாதகமாகக் கொண்டு சந்தர்ப்பவாதிகள் காங்கிரஸிலே ஆதிக்கம் பெற்று வருகின்றனர்.

பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க, போலித் தேசபக்தர்களின் ஆதிக்கமும் காங்கிரஸிலே அதிகரித்து வருகின்றது. இந்தக்குறைபாடுகள் அனைத்தையும் போக்கி காங்கிரஸை முன்னிலும் வலிமையுடையதாகச் செய்ய ஆமதாபாத் தீர்மானம் உதவி புரியும் என்றே நம்புகிறோம். இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய ஒரே அமைப்பு காங்கிரஸே; அதன் உறுப்பினர்களில் பலர் இந்திய விடுதலைக்காக தங்கள் உயிரையே தியாகம் செய்துள்ளனர்; உடைமைகளை இழந்தோரும், உடல் நலத்தை இழந்து நடைப் பிணங்களானோரும், வாழ்க்கை நலனை இழந்து வறுமை எய்தினோரும் பலப்பலர். மனித சமுதாயத்திலேயே தலைசிறந்த மனிதராகிய மகாத்மாவைத் தலைவராகக் கொண்டு வளர்ந்து வந்ததும் காங்கிரஸே; உலகத்திலேயே மிகப் பெரிய வல்லரசாகத் திகழ்ந்த பிரிட்டிஷ் பேரரசை வெளியேற்றி வெற்றி கண்டதும் காங்கிரஸே; ஆயுத பலம் படைத்த வல்லரசை அறவழி ஒன்றினலேயே வெற்றி கண்டு, புரட்சி வரலாற்றிலேயே

ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கியதும் காங்கிரசே. இவ்வளவு சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் வாய்ந்த அரசியல் அமைப்பு காங்கிரசன்றி இந்தியாவில் வேறொன்று இல்லையெனலாம்.

சுதந்திரத்துக்காகத் தானே காங்கிரஸ் தோன்றியது, சுதந்திரம் வந்துவிட்ட பிறகு அது வாழவேண்டிய அவசியமென்ன என்று கேட்கின்றனர் சிலர். காங்கிரசை எதிர்த்து நின்று வெற்றி பெற முடியாத - தங்கள் உழைப்பால் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து ஓட்டுகள் பெறமுடியாத கூட்டத்தாருடைய கேள்வி இது. எந்த ஒரு நாட்டின் வரலாற்றை எடுத்துக் கொண்டாலும் மக்களின் உரிமைக்காகப் போராடிய கட்சி, உரிமைப்போர் வெற்றி பெற்ற உடனேயே மறைந்துவிட்டதாகக் கூறவில்லை. ருஷ்யாவில் 'ஜார்' சாம்ராஜ்யத்தை வீழ்த்தப் போராடி வெற்றி பெற்றது கம்யூனிஸ்ட் கட்சியே. அதே கட்சிதான் இன்றளவும் ருஷ்யாவை ஆளுகிறது. அயர்லாந்தில் பிரிட்டிஷ் பேரசை வெளியேற்றப் போராடி வெற்றி பெற்றது டிவாலராவின் குடியரசுக் கட்சியாகும். அந்தக் கட்சியே விடுதலை பெற்ற அயர்லாந்தை இருபதாண்டுகள் ஆண்டது. சீனவில் முடியரசை வீழ்த்தி குடியரசு அமைக்கப் போராடியது சன்-யாட்-சென் அமைத்த கோமின்டாங் கட்சியாகும். குடியரசுப் புரட்சி வெற்றிபெற்ற பிறகு சுமார் இருபதாண்டுகளுக்கு மேலாக அந்தக் கட்சியே தேசீய சீனவை ஆண்டது. உலகத்தில் உரிமைக்குப் போராடி வெற்றிபெற்ற எல்லா நாடுகளின் வரலாறும் இந்த உண்மையையே போதிக்கின்றது. இந்தியா மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது. சுதந்திரத்திற்காக அறுபது ஆண்டுகளுக்கு மேல் போராடிய காங்கிரஸ், சுதந்திரம் வந்த மறு கணத்திலேயே தற்கொலை செய்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பது அரசியல் ஞானமல்ல. ஆகவே, ஆமதாபாத் தீர்மானம் காங்கிரஸ் மேலும் உயிர்வாழத்தான் வேண்டும் என்பதை உறுதிப்படுத்தியதற்காக யாரும் வருந்தத் தேவையில்லை.

காங்கிரஸ் கலைந்துவிடுகிறதென்றே வைத்துக் கொள்வோம். அந்த இடத்தில் மக்களில் பெரும்பாலோரின் நம்பிக்கையைப் பெற்ற இன்னொரு கட்சி அமருவதற்கான சூழ்நிலை இருக்கிறதா? அந்த சூழ்நிலையை உருவாக்கும் சக்தியையேனும் காங்கிரஸின் எதிர்கட்சிகளும் - அக்கட்சித் தலைமைகளும் பெற்றிருக்கின்றனவா? இல்லையென்பதை எல்லோரும் அறிவர். காங்கிரஸின் இடத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை அதன் எதிர் கட்சிகளுக்கு இருக்கலாம்; இருப்பது இயற்கை. ஆனல், ஆசை ஒன்று மட்டும் இருந்தால் போதாது. மக்களின் அபிமானத்தைப் பெறும் ஆற்றலும் இருக்க வேண்டும். அந்த ஆற்றலை காங்கிரஸின் எதிர்க்கட்சிகள் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பது தான் நம் விருப்பம். அதற்குள் அவசரப்பட்டு காங்கிரஸை

அழிக்க முயல்வது அரா ஜகத்தை விரும்பி அழைப்பது போலாகும்.

உலகச் சூழ்நிலையை உற்று நோக்கினாலும் இந்தியாவில் காங்கிரசைப் போன்ற ஒரு செல்வாக்குள்ள கட்சி தற்போதைய நிலையில் அதிகாரத்திலிருக்க வேண்டியதின் அவசியம் புலப்படும். வெறும் அதிகாரப் பதவியில் வீற்றிருப்பதனாலேயே ஒருவர் சர்வதேச அரங்கில் செல்வாக்கு பெற்றுவிட முடியாது. மக்களின் அன்புக்கு பாத்திரமாயிருப்பவர்கள் அதிகாரப் பதவியில் இருந்தால்தான் அத்தகைய செல்வாக்கு ஏற்படும். திரு. ஜவகர்லால் நேரு அதிகாரப் பதவி வகிப்பவர் மட்டுமல்ல; மக்களின் அன்புக்குப் பாத்திரமானவரும் ஆவார். எனவே அவர் சர்வதேச அரசியல் அரங்கில் அளவற்ற செல்வாக்கைப் பெற்றிருக்கிறார். யுத்த பயங்கரம் இந்தியாவைச் சூழ்ந்திருக்கும் நிலையில் அவரது தலைமையை இழப்பது நாட்டுக்கு நல்லதல்ல. எந்த வகையில் பார்த்தாலும் காங்கிரஸின் தேவையைப் புறக்கணிப்பதற்கில்லை.

காங்கிரஸுக்குள்ளேயுள்ள வேற்றுமைகளைப் போக்கி ஒற்றுமைப் படுத்த வேண்டுமென்று கூறுவது எதற்காக? காங்கிரஸ் அல்லாத கட்சிகள் மீது போர் தொடுத்து அழித்து, ஆளும் உரிமையை காங்கிரஸ் ஒன்றே ஏகபோகமாக அடைய வேண்டும் என்பதற்காகவா? இல்லை. காங்கிரஸ் அல்லாத முற்போக்கு கட்சிகளோடு உறவு கொண்டு அவற்றின் ஒத்துழைப்பைப் பெறவேண்டியதன் அவசியத்தையும் ஆமதாபாத் தீர்மானம் அங்கீகரித்திருக்கிறது. ஆகவே, காங்கிரஸ்காரர்களை ஒற்றுமைப்படுத்த முயல்வது உணவுப் பஞ்சம், நூல் பஞ்சம் போன்ற பயங்கரப் பிரச்னைகளை தீர்க்கவும், யுத்த அபாயங்களிலிருந்து இந்தியாவைக் காப்பதற்கான சக்திகளைத் திரட்டவுமேயாகும். எனவே, காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆமதாபாத் தீர்மானத்தைக் கண்டு பயப்படாமல், அதைப் பயன்படுத்திக் கொண்டு காங்கிரசோடு ஒத்துழைக்கும் என்று நம்புகிறோம். இதனால் அந்தக் கட்சிகளின் செல்வாக்கு மக்களிடையே அதிகப்படுமே ஒழிய அழிந்து விடாது.

காங்கிரஸ் மேலிடத்துத் தலைவர்கள், ஒரு முக்கிய விஷயத்தை மறந்துவிடக் கூடாது. 'ஒற்றுமை' என்ற பெயரில் பதவி வேட்டை, கள்ளமார்க்கெட் போன்ற ஒழுக்கங் கெட்ட செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களின் கையை பலப்படுத்திவிடக் கூடாது. போராட்ட காலத்தில் காங்கிரசுக்கு எதிரிகளாக இருந்து அதிகாரத்திற்கு வந்தபோது காங்கிரஸிற்கு அன்பர்களான பணக்காரர்களில் பலர், இத்தகைய பாதகச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். அப்படிப் பட்டவர்களை காங்கிரசிலிருந்து வெளியேற்ற வேண்டியது காங்கிரஸ் பலமடைவதற்குப் பணி புரிவதாகும். பணக்காரர்கள் என்பதற்காகவே அவர்கள் மீது பழிசுமத்தி விடும் வழக்கம் நமக்கில்லை, ஆனால், பணக்கார

காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் உத்தமர்கள், ஒழுக்க சீலர்கள் என்று சொல்லுவது தெரிந்தோ தெரியாமலோ தீமைக்குத் துணை புரிவதாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், திரு. காமராஜர் தம்மோடு ஊடல் கொண்டுள்ள உண்மைத் தேச பக்தர்களை ஒன்று கூட்டிப் பேசி அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவார் என்று நம்புகிறோம். அதே நேரத்தில், பண பலத்தைக் கொண்டே காங்கிரசை தங்கள் இஷ்டம்போல் ஆட்டி வைக்கலாம் என்று எண்ணுகின்ற சந்தர்ப்ப வாதிகளிடம் எச்சரிக்கை வேண்டும். காங்கிரஸ் ஒரு தேசிய ஸ்தாபனம். அதில் பணக்காரர்களும் இடம் பெறுவது இயற்கையே. ஆனால், காங்கிரஸின் நடவடிக்கைகள் பணக்காரர்களின் சுயநல எண்ணங்களை எதிரொலி செய்வதாக இருக்கக்கூடாது. உழவர், தொழிலாளி மக்களின் வாழ்க்கையை, வளம்படுத்துவதாகவே இருக்க வேண்டும்.

ஆமதாபாத் தீர்மானத்தில் ஒரு குறையிருப்பதாக எண்ணுகிறோம். தீர்மானத்தை எப்பொழுது, எப்படி அமுலுக்கு கொண்டுவருவது என்பன விளக்கப்படவில்லை. வெறும் வேண்டுகோள் விடுப்பதில் பயனில்லை. உடனே வேலையில் இறங்கவேண்டும். அதுதான் மக்கள் வேண்டுவது.

காங்கிரஸ்காரர்கள் ஐக்கியப்பட வேண்டுமென்று சொல்லும் போது, காந்தியடிகள் வகுத்து வைத்துப் போன திட்டங்களை செயலாற்றுவது கொள்கையாக இருக்க வேண்டுமேயொழிய, அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்தானங்களைப் பிடிப்பது ஒன்றுமட்டுமே குறிக்கோளாக இருக்கக் கூடாது. மக்கள் நலம் கருதாத சுயநலமிகளையும், கொள்கையில் பற்றுதல் இல்லாத சந்தர்ப்பவாதிகளையும் சேர்த்துக் கொண்டு, காங்கிரஸ் நாடாளும் கட்சியாக இருப்பதைவிட, உண்மை ஊழியர்களை மட்டுமே வைத்துக் கொண்டு, அரசாங்கத்துக்கு வெளியே யிருந்து மக்களுக்குத் தொண்டாற்றும் கட்சியாக இருப்பதே நல்லது. அரசாங்கப் பதவி ஒன்றுதான், அரசியல் வாதியாக இருப்பதற்கு அடையாளம் என்று காங்கிரஸ்காரர்களில் யாரேனும் நினைப்பார்களாயின், அப்படிப்பட்டவர்கள் தனிக் கட்சி அமைத்துக் கொண்டு தேர்தல் களத்தில் இறங்கட்டும். நமக்கு ஆட்சேபனை இல்லை. காங்கிரஸ் இனியும் வாழத்தான் வேண்டும் - அதுவும், அரசாளும் கட்சியாகவே வாழ வேண்டும் என்றால், மக்களின் நலன் ஒன்றே அதற்கு அடிப்படையாக அமைய வேண்டும்.

எண்ணிக்கை பெரிதல்ல!
எண்ணமே பெரிது!

காங்கிரஸ் மக்களுக்குப் பயன்படும் அமைப்பாக விளங்க வேண்டுமாயின் அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பெரிதாகக் கருதக் கூடாது. அவர்களின் எண்ணத்தின் சிறப்பையே முக்கியமாகக் கொள்ள வேண்டும்.

—காந்தியடிகள்.

(31-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடுவதற்கு, 'தமிழ்' என்னும் குறியீடு ஒன்றையே வழங்க வேண்டும்.''

'திராவிடம்' என்ற சொல்லை ஏற்றுக்கொண்டவர் அறிஞர் கால்டுவெல். அவரே, தமிழுக்குரிய இடத்தில் 'திராவிடம்' என்பதனை ஏற்கக்கூடாதென்று எச்சரிக்கை செய்கிறார்.

ஆம்; தமிழ், தமிழ்தான். தமிழர், தமிழர்தான். இவற்றை மறைக்க முயலுவதும் மாற்றுப் பெயர் கொடுப்பதும் மதியுடையார் செய்கையல்ல. ஆனால், திராவிடஸ்தான் வேண்டுபவர்கள், தமிழரை மட்டுமே குறிப்பிடுமிடத்துங் கூட திராவிடரென்று கூறுவதற்குத் தயங்குவதில்லை.

திராவிடம் என்ற சொல், சங்க காலத் தமிழ் இலக்கியங்களிலும் இல்லை. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றிய தமிழ்ப் புலவர்களில் சிலர்தான் திராவிடம் என்ற சொல்லை, தத்தம் நூற்களில் பொறித்துள்ளனர். அதுவும், வடமொழிக்கும் வடமொழிச் சொல்லுக்கும் பெருமை தேடும் கருத்துடனே செய்யப்பட்டதாகும்.

முதன் முதலில், ஆரிய நாட்டு (வட நாட்டு) அறிஞர்கள்தான் தென்னிந்திய மொழிகளைத் திராவிடம் என்றும், அம்மொழி பேசும் மக்களை திராவிடர் என்றும் தாம் இயற்றிய வடமொழி நூற்களில் குறித்தனர். கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் இந்த வழக்கம் தமிழகத்தில் தோன்றியதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் திராவிடம் என்பதன் பொருள் என்ன?

'த்ரு' என்னும் வினைப் பகுதியின் அடியாகத் தோன்றிய 'த்ரவிடம்' என்னும் சொல்லுக்கு, 'துரத்தப்பட்டது' என்று பொருள் கூறுகின்றனர் வடமொழியாளர்''

(தமிழ் வரலாறு-பக்-5)

என்கிறார், வடமொழியிலும், தமிழிலும் வல்லுனரான திரு. மு. ராகவய்யங்கார். தமிழர், வட இந்தியாவில் வாழ்ந்த காலத்தில், அங்கு குடியேறிய ஆரியர்களால் தென்னிந்தியாவுக்கு அடித்துத் துரத்தப் பட்டதாக வடமொழிப் புலவர்களில் சிலர் எண்ணினர். ஆகவே, துரத்தப்பட்ட இனத்தவரால் பேசப்படும் மொழி என்ற காரணத்தால் தமிழையும் அதன் கிளை மொழிகளாகக் கருதப்படும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றையும், 'த்ரவிடம்' எனக் குறித்தனர்.

ஆரிய இனத்தை, ஆரியப் பண்பை, ஆரிய மொழியை, ஆரிய மொழியின் எழுத்தை, ஆரியர்களின் எண்ணத்தை அடியோடு வெறுக்கும் 'திராவிடத்தார்கள், அந்த ஆரியர்களால் தென்னிந்திய மொழிகளுக்கு இடப்பட்ட 'திராவிடம்' என்ற பெயரை மட்டும் எடுத்துக்கொண்டது எப்படிப் பொருந்தும்? அதுவும்

'இனிமை' என்ற உயர் பொருளில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வழங்கிவந்த 'தமிழ்' என்ற பெயரிருக்க, இழி பொருளில் வழங்கப்பட்ட 'திராவிடம்' என்ற பெயரையா ஏற்பது? துரத்தப்பட்டவர்கள் என்ற கேவலத் தன்மையைக் குறிக்கின்ற ஒரு பெயரைத் தமிழர் ஏற்றுக்கொள்வது தன்மானமற்ற அடிமைத்தனம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்வது?

திராவிடம் என்பது வடமொழிச் சொல்லாயிருக்க, அதை மறைக்கப் பார்க்கின்றனர் திராவிடத்தார்கள். 'திருவிடம்' என்ற தமிழ்ச் சொல்தான் 'திராவிடம்' என மருவி வழங்கப்படுகிறதாம்! இலக்கண ஞானமற்ற இந்த வாதத்தைக் கேட்டுச் சிரிப்பதைத்தவிர வேறு என்ன செய்வது? மற்றும், திராவிடம் என்ற சொல், நூல் வழக்கில் இருந்து வந்திருக்கிறதேயன்றி, எந்த நாளிலும் அச்சொல் மக்கள் பேச்சு வழக்கில் இருந்ததில்லை. அப்படியிருக்க, இப்போது மட்டும் அதைப் பேச்சு வழக்கில் புகுத்த வேண்டும் என்று பிடிவாதம் செய்வது பிற்போக்குத்தனமேயன்றி, முற்போக்குக் குணமன்று.

புலவர் சுந்தரம் பிள்ளை, தாம் இயற்றிய 'மனோன்மணீயம்' என்ற நாடக காவியத்தில், தென்னாட்டைத் திராவிட நாடு எனக் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, தம் கூற்றுக்கு ஆதரவு தேடுகின்றனர் திராவிடத்தார்கள். புலவர் சுந்தரனார், இந்தியாவிலிருந்து தென்னாட்டைத் துண்டாடவேண்டும் என்பதற்காக திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. இதை அவரது வாக்காலேயே புலப்படுத்துவோம் :

நீராருங் கடலுடுத்த
  நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
  திகழ் பரதகண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும்
  தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த
  திரவிடநல் திருநாடும்
  —(மனோன்மணீயம்-பாயிரம்)

என்ற வரிகளில் 'திராவிட நாடு' எனப்படும் தென்னாட்டை பாரத நாட்டின் ஒரு பகுதியாகவே குறிக்கின்றார் புலவர் சுந்தரனார். கவிதாகூர், தாம் இயற்றிய "ஜனகணமன" என்ற தேசியப் பாடலில் தென்னாட்டை 'திராவிடம்' என்று குறிப்பிட்டிருப்பதைக் காட்டி வாதாடுகின்றனர் திராவிடத்தார்கள். கவி தாகூரும், புலவர் சுந்தரனாரைப் போன்றே 'திராவிடம்' எனப்படும் தென்னாட்டை ஐக்கிய இந்தியாவின் ஒரு பாகமாக வைத்தே பாடியிருக்கின்றார். ஆகவே, இந்த இரு பெரும் புலவர்களும் 'திராவிடம்' என்ற சொல்லை அங்கீகரிப்பதை ஆதாரமாகக் காட்டுபவர்கள் அதே பாடல்களில் அவர்கள் உருவகப் படுத்திக் காட்டும் ஐக்கிய இந்தியா கொள்கையை மறைத்துப் பேசுவது அறிவுடைமையல்ல.

'ஜனகணமன' என்ற பாடலில், தென்னாடு முழுவதையும்

'திராவிடம்' என்று குறிப்பிட்டிருப்பதை ஆந்திரர் ஆட்சேபிக்கின்றனர். இந்தியாவின் தேசிய கீதம் 'வந்தேமாதரம்' என்று துவங்குவதல்ல; 'ஜனகணமன' என்று துவங்கும் கவி தாகூரின் பாடல்தான் என்று மேலிடத்து அரசினர் அறிக்கை விட்டார்களல்லவா? அப்போது ஆந்திர மகா சபையினரும், மத்திய பார்லிமெண்டிலுள்ள ஆந்திர அங்கத்தினர்களில்பலரும் "திராவிடம் என்ற சொல் ஆந்திரத்தைக் குறிக்காது; 'ஆந்திரம்' என்றே தெளிவாகக் குறிப்பிட வேண்டும்" என்று வெளிப்படையாகவே அறிக்கை விடுத்தனர். சிந்து மாகாணம் பாக்கிஸ்தானில் சேர்ந்துவிட்டதால், தேசிய கீதத்தில் சிந்து என வரும் பகுதியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக 'ஆந்திரம்' என்ற பெயரைப் பொருத்தலாம், என்றும் ஆலோசனை கூறினர். அதுபோன்றே, தமிழகத்தை திராவிடம் என்று குறிப்பதை, தமிழரசுக் கழகத்தாரும் ஆட்சேபித்திருக்கின்றனர். ஆகவே, 'ஜனகணமன' என்ற பாடலில் இந்திய நாடுகள் பிரிக்கப்பட்டுள்ள வகை மொழிவழி தேசிய இனங்களின் முடிவான கொள்கையல்ல. மொழிவாரி மாகாணப் பிரிவினைகள் முற்றுப் பெறும் போது, இந்திய தேசிய கீதமும் மாற்றியமைக்கப் படுவது திண்ணம். ஆகவே, திராவிடத்தார்கள் தேசிய கீதத்திலுள்ள 'திராவிடம்' என்ற சொல்லைக் காட்டி தங்கள் தவறான போக்குக்கு பலம் தேடப் பார்ப்பது, வெள்ளத்தில் மூழ்கிக்கொண்டிருப்பவன், புல்லைப் பிடித்துக் கரையேற நினைத்த கதையை யொக்கும்.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளும் தமிழின் கிளை மொழிகள் என்பது ஆராய்ச்சியில் கண்ட உண்மையாக இருக்கலாம். ஆனால், இன்று அம்மொழிகள் அடைந்துள்ள வளர்ச்சியை நோக்கும்போது அவை வடமொழியெனப்படும் சமஸ்கிருதத்தின் கிளை மொழிகளே என்று சொல்லக்கூடிய அளவுக்கு மாற்றம் அடைந்துவிட்டன. வடமொழிச் சொற்கள் கலவாத அல்லது மிகக் குறைவாகக் கலந்துள்ள தமிழ் நூலையே தமிழர் பெரிதும் போற்றுகின்றனர். இதற்கு நேர்மாறாக, வடமொழிச் சொற்கள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகக் கலந்துள்ளதோ, அந்தத் தெலுங்கு நூலையே ஆந்திரர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர். கன்னடர், கேரளர் மனப்பான்மையும் இதுபோலத்தான். தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகள் தமிழின் கிளை மொழிகள் என்ற ஆராய்ச்சிக் கருத்தைக்கூட அம்மொழிகளைப் பேசும் மக்கள் அங்கீகரிக்கவில்லை. குறிப்பாக, தெலுங்கு மொழி தமிழின் கிளை மொழி என்று கூறிவிட்டாலே ஆந்திரர்கள் ஆத்திரம் கொள்கின்றனர். படித்துப் பண்புபெற்ற அறிஞர்கள்கூட இதற்கு விதிவிலக்கல்லர்.

தென்னிந்திய மக்களுக்கு 'திராவிடர்' எனப் பெயர் வந்தது எதனால்? பிற இனத்தவரிடமிருந்து நிறம், தோற்றம் ஆகிய

வற்றில் வேறுபாடிருந்ததனுலேயேயாகும். திராவிடர் எனப்படுவோரின் தோற்றத்தைப் பற்றி கிரீயர்சன் கூறுவதாவது :—

"கரிய நிறம்; கட்டுறுதி வாய்ந்த உடல்; நீண்ட தலை; கரிய கண்கள்; கருத்து செழித்து வளர்ந்து சுருளும் இயல்புடைய தலை மயிர்; முனை அகன்றும் அடிப்பகுதி தட்டையாகவும் உள்ள மூக்கு; நீண்ட முன்னங்கைகள் - இந்தத் தோற்றத்தோடு காணப்பட்டு வந்தவர்களெல்லாம் திராவிடர்களேயாவர்."

—இதுதான் திராவிடரைப் பற்றி கிரீயர்சன் வரையும் சித்திரம். இந்தத் தோற்றத்திலா இன்று நம் தமிழர் காணப்படுகின்றனர்? தமிழர்கள் மட்டுமல்ல; மலையாளிகள், கன்னடர்கள், கேரளர்கூட இப்படியில்லையே!

ஆகவே மொழி, தோற்றம், சொல் வழக்கு, இலக்கியத் தொன்மை, வரலாற்று உண்மை ஆகிய எவ்வகையில் நோக்கினும் தென்னிந்திய மக்கள் ஒரே (திராவிட) இனத்தவர் என்றும், அவர்கள் வாழும் நிலப்பரப்பு முழுவதும் ஒரே (திராவிட) நாடு என்றும் கூறுதல் அறிவுக்கும் அனுபவத்துக்கும் புறம்பானதாகும்.

ஆராய்ச்சியாளர் தெரிவிக்கும் கருத்துகளில் எதுவும் முடிந்த முடிவன்று. இதுவரை ஆராய்ந்ததில் காணப்பட்ட முடிவை மேலும் ஆராய்வதற்கு அடிப்படையாக்க் கொள்ளவேண்டுமேயன்றி, அதையே முடிந்த முடிவாகக் கொள்வது அறிவுடையார் செயலன்று.

பாராட்டுகிறோம்

பெங்களூர் நகரசபையின் துணைமேயராக திரு. ஜெயசீலன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் செய்தியறிந்து மகிழ்ச்சியடைகின்றோம். திரு. ஜெயசீலன், 'தாழ்த்தப் பட்ட வகுப்பு' எனப்படும் பழந்தமிழ் குடிமகனுவார், சிறந்த தேசியவாதி; தமிழரசுக் கழகத்தின் குறிக் கோள்களில் நம்பிக்கை யுடையவர்; ஒடுக்கப் பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபடுவதிலேயே தமது வாழ்நாளைக் கழித்து வருபவர். அத்தகைய ஒருவர் துணைமேயராக வந்ததுபற்றி தமிழ் மக்கள் அனைவருமே மகிழ்ச்சியடைய வேண்டும். அன்னாரைத் துணைமேயராகத் தேர்ந்தெடுத்த பெங்களூர் நகரசபை உறுப்பினர்களுக்கும் நமது பாராட்டு.

மேலும், ஆராய்ச்சியாளர்கள் வெளியிடும் கருத்துக்கள் பெரும்பாலும் வரலாற்றுப் பாடங்களில் சேர்க்கக்கூடியனவேயன்றி, அன்றாட வாழ்க்கையோடு பொருந்தக்கூடியன அன்று. ஆராய்ச்சி முடிவுகள் அனுபவத்திற்கும் மக்களின் ஒன்றுபட்ட அபிப்பிராயத்திற்கும் உரியனவாயின், அவற்றை அங்கீகரிப்பதில் பிழையில்லை. ஆனால், திராவிட இனம் என்பதும், திராவிட நாட்டுப் பிரிவினை என்பதும் அனுபவத்திற்குப் பொருந்துவதல்ல. தென்னிந்திய மக்களின் அபிப்பிராயமும் அதற்கு ஆதரவாக இல்லை, ஏன்? எதிராகவும் இருக்கின்றது.

(தொடரும்)

துயிலை நீக்கு!

—ஒட்டக்கூத்தன்

●

முத்தமிழின் பழமையினை நோக்க வேண்டாம்;
மொழிக்கெல்லாம் மூத்தமொழி தமிழே! ஆயின்,
இத்தரையில் அதையெதிர்த்த மொழிகள் எல்லாம்
இடர்பட்டு மடிந்தொழிய தனித்து நின்று,
புத்தமுதாய் இனித்திடுமுன் செந்தமிழ் போல்
பூதலத்தில் வேறுமொழி யுண்டோ? இன்று
சத்தகன்று போயிற்று? இந்தி ஏனோ?
சடுதியினில் தமிழ்காப்பாய் துயிலை நீக்கு.

கண்ணகிக்குச் சிலையெடுத்தார் இமயந் தன்னில்;
கடல் கடந்து வாணிகத்தை நடத்திவிட்டார்;
பண்ணிசையும் யாழிசையும் தனித்தமிழில்
பாய்ச்சிவிட்டார் கன்னலென; மேலை நாட்டு
அன்னியர்கள் ஆவலுடன் நோக்கும் வண்ணம்
அழகு பெறப் பெருங்கலைகள் வளர்த்தார்; யாரும்
மன்னரென வாழ்ந்திட்டார் தமிழர்; அன்னோர்
மரபுவந்தாய்! நிலை நோக்கத் துயிலை நீக்கு!

பொன்னியினால், பெண்ணையினால், பாலி யாற்றால்
பூத்திருக்கும் தமிழகத்தின் வளத்தை நாட்டுக்
கன்னலுடன் செந்நெல்லும் தினைவகையும்
கனிச்சுவையும் காய்வகையும் சொல்லும்; கோடை
மின்னலுண்டு; மழையுண்டு; ஆளுதற்கு
மிக்க தொகை கொண்ட மக்கள் இங்கே உண்டு;
உண்ணுபவர் உழைப்பவராயிருக்க வேண்டும்!
உன்னுடைமை வேண்டுமென்று துயிலை நீக்கு!

Edited, Printed & Published by M. P. Sivagnanam at the Kannagi Achagam, 1-29, Irusappa Garmani Street, Triplicane, MADRAS - 5.



Wrapper Printed by S. S. V. Press, Mount Road, Madras-2.